வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 25.04.2022 திங்கட்கிழமை | இதழ் : 140 | பக்கங்கள் : 16




# மஹிந்த பிரதமராக நீடிப்பதற்கு 50 எம். பிக்கள் மட்டுமே ஆதரவு!

## கொழும்பை விட்டு விலகினார் பிரதமர் அமைச்சரவையில் பங்கேற்பதும் சந்தேகம்!

கொழும்பு, ஏப்ரல் 25

**மஹிந்த ராஜபக்ஷவே பிரதமர் பதவியில் தொடர வேண்டும் என்று வலியுறுத்தும் ஜனாதிபதிக்கான ஆவணத்தில் 50 பாராளுமன்ற உறுப்பினர்களே கையொப்பமிட்டுள்ளனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தனர்.**

இன்றைய தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு முன்னதாக மஹிந்த ராஜபக்ஷவே பிரதமர் பதவியில் தொடர வேண்டும் என்று வலியுறுத்தி 113 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்கள் அடங்கிய ஆவணத்தை ஜனாதிபதியிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் ஆவணத்தில் கையொப்பமிடும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. காலை முதல் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கையொப்ப சேகரிப்பில் நேற்றிரவு வரை 50 பாராளுமன்ற உறுப்பினர்களே ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர் என்று அறிய வருகின்றது.

இதனிடையே, மஹிந்த ராஜபக்ஷவை ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பி

15

# அரசியலில் பெரும் திருப்பம் இரு தினங்களில் ஏற்படலாம்!

கொழும்பு, ஏப். 25

இரு நாட்களுக்குள் தெற்கு அரசியலில் பெரும் திருப்பம் ஏற்படக்கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் நேற்று பேசப்பட்டன.

அரசாங்கத்தின் முக்கிஸ்தரான டலஸ் அழகப்பெரும, பிரதமர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். இந்நிலையில், அவருக்கு ஆதரவாக சரித ஹேரத் எம். பியும் களமிறங்கியுள்ளார்.

இதனிடையே, எதிரணி பாராளுமன்ற

15

# காலிமுகத்திடலில் குவிந்தனர் சர்வதேச பத்திரிகையாளர்கள்!

காலிமுகத்திடல், ஏப். 25

காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராக நடக்கும் போராட்ட களத்தில் சர்வதேச பத்திரிகையாளர்கள் நூறுக்கும் மேற்பட்டோர் கூடியுள்ளனர்.

காலிமுகத்திடலில் தன்னெழுச்சியாக இளைஞர்கள் கூடி கோட்டா கோ கம என்ற போராட்ட கிராமத்தை உருவாக்கி இரு வாரங்களுக்கும் மேலாகப் போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டம் குறித்து சர்வதேசம்

15



# யாழ். வந்த அமெரிக்க தூதர் பல தரப்பினரை சந்தித்தார்!

யாழ்ப்பாணம், ஏப். 25

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியோன்சங் யாழ்ப்பாணம் வந்துள்ளார். நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

தூதுவராகப் பதவியேற்ற பின்னர் அவரின் முதல் பயணமாக இது அமைந்தது. நேற்றைய தினம் யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பாவை சந்தித்து அவர்

15

# 21ஆவது திருத்த முன்மொழிவை வழிமொழிகிறது கூட்டமைப்பு!

## சர்வகட்சி கூட்டத்தில் சுமந்திரன் எம். பி.

கொழும்பு, ஏப். 25

“19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தும் நோக்கம் இருந்தால் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் தன்னிச்சையாக இயங்கும் அணியால் சமர்ப்பிக்கப்பட்ட 21ஆவது திருத்தத்துக்கான முன்மொழிவை மையப்படுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்”, என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா

15

# உறுதியான அரசியல் தலைமை தமிழ் மக்களிடத்தே ஏற்படவில்லை!

யாழ்ப்பாணம், ஏப். 25

தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் உறுதியான அரசியல் தலைமை ஒன்று ஏற்படவில்லை என தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார

15

# மேலும் 50 கோடி டொலர் கடன் இலங்கைக்கு இந்தியா வழங்கும்!

கொழும்பு, ஏப். 25

இலங்கைக்கு மேலும் 50 கோடி டொலர்களை கடனாக வழங்குவதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது. எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு இந்தக் கடன் வசதி அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், நிலைமையை சமாளிப்பதற்கு

15



# பிரதமரின் இல்லத்தை முற்றுகையிட முயற்சி!

## பாதுகாப்பு அமைச்சரின் வீடும் முற்றுகை கொழும்பு முழுவதும் நேற்று பதற்றநிலை

கொழும்பு, ஏப்ரல் 25

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பு இல்லத்தை நேற்று ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட முயன்றதால் நேற்று அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இதனிடையே, கம்பஹா - மினுவாங்கொடையில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்னவின் இல்லத்தையும் முற்றுகையிட்டு நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு முழுவதும் பல்வேறு இடங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன.

அனைத்துப் பல்கலைக்கழக

15

# அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று சுகயீன விடுமுறை போராட்டம்!

கொழும்பு, ஏப். 25

இன்று திங்கட்கிழமை ஆசிரியர்கள், அதிபர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று ஆசிரியர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

விலையேற்றமும் குடும்ப பொருளாதார நிலையும் மாணவர்களின் வரவையும் கணிசமாக பாதித்துள்ளன. அத்துடன், தூர பிரதேசங்களுக்கு சென்று கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் பொருளாதார நெருக்கடிகளை மட்டுமின்றி, குடும்பச் சுமைகளுடன் போக்குவரத்து சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு

15

# வடக்கின் பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

ஆசிரியர்கள், அதிபர்களின் போராட்டத்தால் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஒத்திவைத்துள்ளது.

15

## இப்படியும் நடக்கிறது…!

கடந்த சனியன்று இந்தப் பத்தியில் ஒரு நண்பரைப் பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

எழுத்தாளரான அந்த நண்பர் கதை எழுதுவதை விட்டு விட்டது ஏன் என்று கேட்டபோது, கதை எழுதுவதால் இந்த சமூகத்தை மாற்றிவிடமுடியாது என்று அவர் சலித்துக் கொண் டதையும் குறிப்பிட்டிருந்தேன்.

குணரட்ணம் என்ற அந்த நண்பரின் பெயர் நினைவில் இருந்த போதிலும், அந்தப் பெயருக்கு முன்னால் அவர் எழுதிய முதலெ ழுத்தைக் கூடமறந்துவிட்டேன் என்றும், இப்போது எங்கே இருக்கிறார் என்பதும் தெரியவில்லை என்றும் எழுதியிருந்தேன். நேற்று அலுவலகம் வந்ததும் முதல் வந்த அழைப்பு குணரத்தினத்தின் அழைப்பு.

நான் மறந்துபோன முதலெழுத்தையும் சேர்த்து, முத்துகுணரத்தினம் கதைக்கி றேன் என்றார்.

எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒன்று, அவர் தொலைபேசியில் தொடர்பில் வந் தது. நாற்பது வருடங்களுக்குப் பிறகு அவர் குரல் கேட்டது. மற்றையது, இந்தப் பத்தியை எழுதுவதால் பயன் உண்டு என்பது தெரிய வந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி.

யுத்தம் நம்மை இடம்பெயர வைத்தது. புலம்பெயர வைத் தது. இதனால் நண்பர்களை மாத்திரமல்ல, உறவுகளைக்கூட அவர்கள் எங்கே இடம்பெயர்ந்தார் கள் என்பது தெரியாமலும், எங்கே புலம்பெயர்ந்தார்கள் என்று தெரியாமலும் சிதறி- சின் னாபின்னப்பட்டு நமது இனம் இன்று வாழ்ந்து கொண்டி ருக்கின்றது.

இன்று எனது பத்தியை எழுதியதால் நண்பர் ஒருவர் எங்கே இருக்கிறார் என் பதை தெரிந்துகொள்ள முடிந்ததை நினைக் கின்றபோது, “ஈழநாடு” குழுமத் தலை வர் குகநாதன் ஒருதடவை சொன்ன சம்பவம் ஒன்றுதான் இப்போது ஞாபகத்திற்கு வரு கின்றது.

அவர் ஐரோப்பாவில் முதல் தமிழ் வானொலியை ஆரம்பித்த பின்னர், அந்த வானொலியில் உறவுகளைத் தேடும் நிகழ்ச்சி ஒன்றை ஆரம்பித்திருந்தாராம்.

அதாவது அந்த நிகழ்ச்சியில், தொலைபேசிவழியாக இணைந்துகொள்ளும் ஒருவர், தன்னை அறிமுகம் செய்து வைத்த பின்னர், அவரது உறவினரையோ, அல்லது நண்ப ரையோ அவர் விபரங்களைச் சொல்லி தேடுவார். அப்போது அந்த நிகழச்சியை கேட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் யாராவது அவரைத் தெரிந்திருந் தால், அதாவது அவர் தேடுகின்ற நபரைத் தெரிந்திருந்தால், மற்றுமொரு தொலை பேசி வழியாக அந்த நிகழ்ச்சியில் இணைந்துகொண்டு அவர் எங்கே இருக்கின்றார் என்ற விபரங்களை தெரிவிப்பார்.

அதாவது அந்த நிகழச்சி, ஒவ்வொரு நாளும் பல உறவுகளை இணைய வைத்த தாம். ஒரு நாள் அந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்ட ஒருவர், தான் முதலாம் வகுப்பில் கல்விகற்றபோது தனக்கு படிப்பித்த ஆசிரியை பெயரைச் சொல்லி, அவரை தனது வாழ்நாளில் ஒரு தடவையாவது பார்க்கவேண்டும் என்ற தனது ஆவலைத் தெரிவித்திருக்கிறார். அவர் அந்த நிகழ்ச்சியில் கதைத் துக்கொண்டிருக் கும் போதே, அவர் காண விரும்புகின்ற அந்த ஆசிரியையே அடுத்த தொலைபேசி யில் தொடர்பில் வந்துவிட்டார்.

இருவருக்கும் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சியில், அவர்களால் கதைக்கக்கூட முடி யாத அளவிற்கு சில நிமிடங்கள் உணர்ச்சி பொங்க அமைதியாக இருந்தனர்.

இது அல்ல அதிர்ச்சி, இனிச் சொல்லப்போவதுதான் உங்க ளுக்கு அதிர்ச்சியாக இருக்கும்.

அந்த ஆசிரியை தனது மகனுடன் கனடாவில் ஒரு தொடர்மாடி குடியிருப்பில் வாழ்கின்றார். அந்த தொடர்மாடி, நமது கொழும்பு அன்டர்சன் தொடர்மாடி போன்ற ஒன்று.

ஆசிரியையை தேடிய அவரது மாணவனும் அந்த தொடர் மாடியிலேயே பத்து வருடங்களாக வாழ்ந்துகொண்டிருக் கின்றார். புலம்பெயர் வாழ்வு எத்தகையது என்பதை வாசகர்கள் இப்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

குணரத்தினம் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது இந்த விடயமும் ஞாபகத்திற்கு வந்ததால், இன்றைய பத்தியில் எழுதவேண்டிய விசயத்தையே மறந்து எங்கேயோ செல்ல வேண்டிவந்துவிட்டது.

இன்று காலை லண்டனிலிருந்து சமூக ஆர்வலர் சச்சியிட மிருந்து ஒரு குறுந்தக வல் வந்தது. அவரிடமிருந்து வருவதெல் லாமே கட்டாயம் படிக்கவேண்டிய ஒன்றாகத்தான் இருக்கும்,

படித்தேன். அது இப்படி சென்றது-

மக்கள் பிரதிநிதிகளாக இருப்பது என்பது மக்களுக்கு தலைமை தாங்குவதுதான். மக்களுக்கு தலைமை தாங்குவது என்பது நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது. மக்களை அடுத்த கட்டத்துக்கு தயார்படுத்து வது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மக்களைத் துண்டுவது. அதற்கு வேண்டிய கட்டமைப்புக்களை உருவாக் குவது. அதாவது, மக்களை அமைப்பாக்குவது. திரள் ஆக்குவது.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பெரும் பாலான அரசியல்வா திகள் இப்பொழுது மட்டுமல்ல இதற்கு முன்னரும் பெரும் தொற்று நோய் சூழ லுக்குள் அவ்வாறு மக்களுக்கு தலைமை தாங்கவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்க ளின் நிதியை பெற்று நிவாரணம் வழங்கினால் மட்டும் போதாது, மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். வழிகாட்ட வேண்டும்.

இப்பொழுது பொருளாதார நெருக்கடி வந்திருக்கிறது. அரசாங்கத்தின் உரக் கொள்கை காரணமாக விவசாயம் பெரிய அளவில் வீழ்ச்சி அடைந்துவிட்டது. இதனால் இன்னும் இரண்டு மாதங்களில் அரிசிக்கு தட்டுப்பாடு வரலாம் என்று எச்சரிக்கப்படுகிறது. அரசாங்கம் அரிசியை இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் இறக்க முயற்சிக்கிறது. அரசாங்கம் அதைச் செய்யட்டும். ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் தமிழ் மக்கள் எப்படிப் பட்ட முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து ஏன் வழி காட்டக் கூடாது?நெருக்கடியான காலகட்டங்களில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வழி காட்டுவதுதான் தலைமைத்துவம். அப்படிப்பட்ட தலைவர்கள் எத்தனை பேர் தமிழ்த்தேசிய அரங்கில் இப்பொழுது உண்டு? அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல அவர்களுக்கு வெளியே இதுபோன்ற நெருக்கடியான தருணங்களில் மக்களுக்கு வழிகாட்டவல்ல சிவில் சமூகத் தலைமைகள் எத்தனை உண்டு? ஆன்மீக தலைமைகள் எத்தனை உண்டு?

-இப்படிச் சென்றது அந்த தகவல். இவ்வளவையும் படித்துவிட்டு கடைசியில் இருந்த லிங்கை அழுத்திய பின்னர்தான் அது, “நிபுணத்துவ மதியுரைஞர்“ நிலாந்த னின் கட்டுரையிலிருந்த ஒரு பகுதி என்பது தெரிந்தது. நிலாந்தன் மாத்திரமலல், அவரைப்போலவே எழுதுகின்ற நிபுணத்துவ மதியுரைஞர்கள் எல்லோருமே இதனைத்தான் எழுதுகின்றார்கள். அவர்கள் எல்லோருமே இப்படி எழுதுவதோடு தமது பணி முடிந்தது என்றே கருதுகின்றனர்.

ஆனால் அவர்கள் எல்லோருமே வேட்டியை மடித்துக்கட்டிவிட்டு, மக்களுக்கு வழிகாட்டுகின்றவர்களாக ஏன் மாறக்கூடாது என்று கேட்காமலும் இருக்க முடிய வில்லை!

இப்படி இவர்கள் இறங்கினாலாவது அரசியல் தலைவர்களும் வேட்டியை மடித்துக் கட்டுவார்கள்!

- ஊர்க்குருவி

# பிரதமரை பதவி விலகக் கோர எவருக்கும் அருகதை இல்லை!

## நாமல் ராஜபக்ஷ எம். பி. விசனம்!

கொழும்பு, ஏப். 25

“பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு கோருவதற்கு எவருக் கும் அருகதை இல்லை”, என்று பாரா ளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜ பக்ஷ தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அமைச்சரவை யும் உடன் பதவி விலகி சர்வகட்சி அடங்கிய இடைக்கால அரசு அமைய வழிவிட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும எம். பி. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார். இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. கருத்துரைக்கும்போதே மேற்கண்ட வாறு கூறினார்.

மேலும், ”நாட்டின் நெருக்கடி நிலைமைக்குப் பதவி விலகல் தீர்வு அல்ல. கட்சி வேறுபாடின்றி அனை வரினதும் ஒத்துழைப்புத்தான் மிகவும் அவசியம். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வைப் பதவி விலகுமாறு கோருவதற்கு எவருக்கும் அருகதை இல்லை. அவர் மக்கள் மனதை வென்ற தலைவர்.

தற்போதைய புதிய அமைச்சர்களை யும், இராஜாங்க அமைச்சர்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே நியமித்தார். எனவே, புதிய அமைச்ச ரவை தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்கவேண்டும். ஜனாதி பதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் நோக்கு டன் எமது கட்சிக்குள் இருந்தும் வெளி யில் இருந்தும் சிலர் செயற்படுகின்றனர். அவர்கள் தொடர்பில் நாம் மிகவும் அவ தானமாக இருக்கின்றோம். நிலையான அரசு அமைய ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்” - என்றார்.

(ஐ)

# மக்களின் கோரிக்கைகளை அரசு செவிமடுக்க வேண்டும்!

## ரணில் விக்கிரமசிங்க எம். பி.

கொழும்பு, ஏப். 25

மக்கள் கோரும் புரட்சிகரமான மாற் றத்துக்கு அரசாங் கம் செவிசாய்க்க வேண்டும் என்று, ஐக்கிய தேசிய கட்சி யின் தலைவரும் முன்னாள் பிரதருமான ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள் ளார்.

கொழும்பில் இடம்பெற்ற சந்திப் பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.அரசியல்வாதிகள் எடுக் கும் தீர்மானங்களை மக்கள் ஏற்றுக் கொள்ளாவிட் டால் அதற்கு மேல் பேசுவதில் அர்த்தமில்லை.

ஆட்சிமாற்றமொன்றை கோரியே இளைஞர்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். எனினும் அவ்வாறான மாற்ற மொன்று பாராளுமன்றத்தில் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

# சுகாதார அமைச்சின் தளம்மீது “தமிழீழ சைபர் படை” தாக்குதல்

கொழும்பு, ஏப். 25

சுகாதார அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தின் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

‘தமிழீழ சைபர் படை’ என்று அடையாளப்படுத்திய குழுவா லேயே குறித்த இணையத்தளம் ஹேக் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

http://www.health.gov.lk என்ற




இணையத்தளத்தின் மீதே இவ்வாறு சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ஐ)

# “கொலைகார கோட்டா வீட்டுக்கு போ” பிரதமர் இல்லத்தின் சுவரில் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 25

கொழும்பு - விஜ யராமையில் பிரத மர் மஹிந்த ராஜ பக்வின் அரச இல் லத்தின் சுவரில் போராட்டக்காரர் கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வுக்கு எதிரான வாசகங்களை எழுதி தங்கள் எதிர்ப்பு களை வெளிப்ப டுத்தி வருகிறார்கள்.



“கொலைக்கார கோட்டா வீட்டுக் குப் போ”, “அன்று ரதுபஸ்வல இன்று ரம்புக்கனை”, “225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வேண்டாம்”, என்ற வாசகங்களை போராட்டக்காரர்கள் சுவரில் எழுதியுள்ளார்கள். (ஐ)

Eelanadu
25.04.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், சித்திரை 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## சிங்கள-பௌத்த தேசியவாதம்?

மெதமுல்ல ராஜபக்ஷக்கள் சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் முகமாக நோக்கப்பட்டனர். கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி சிங்கள - பௌத்த தேசியவாதிகளால் கொண்டாடப்பட்டது. கோட்டாபய ராஜபக்ஷவும், சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் நவீன முகமாக இருக்கவே விரும்பினார். அந்த அடிப்படையில்தான், ஒவ்வொரு விடயங்களையும் திட்டமிட்டு முன்னெடுத்தார். பௌத்த அடையாளங்களுடன்கூடிய கொடியொன்றை வடிவமைத்து, அதன் பின்னால் அமர்ந்தார்.

ஒவ்வோர் அலுவலகங்களிலும் அந்த கொடியே முதன்மைப் படுத்தப்பட்டது. சிங்கள - பௌத்தத்தின் அடையாள நகரமாக கருதப்படும், அநுராதபுரத்தின் ருவான் வெலிசாயவில் தனது பதவிப் பிரமாணத்தை மேற்கொண்டார். சுதந்திர தின உரையில் - தன்னையொரு பௌத்த - சிங்கள தலைவன் என்று பிரகடனம் செய்தார். “நான்தான் நீங்கள் தேடிய தலைவன்”, என்றார். இப்படியான ஒருவருக்கு எதிராகவே சிங்கள மக்கள் திரும்பியிருக்கின்றனர். இப்படியானவரை வீட்டுக்கு செல்லுமாறு சிங்களவர்கள் கோருகின்றனர்.

இந்த விடயங்களின் அடிப்படையில் சிங்கள - பௌத்த தேசியவாதத்தை நோக்க முடியுமா? சிங்கள - பௌத்த தேசியவாதம் நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாகவும், அதன் இறுதி நாட்களை அது எண்ணிக் கொண்டிருப்பதாகவும் ஒரு பார்வை முன்வைப்படுகின்றது. இது சரியான பார்வைதானா? ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியை, சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் வீழ்ச்சியாக பார்க்கலாமா?

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பின்னால் அனைத்து சிங்கள தேசியவாதிகளும் அணிதிரண்டிருந்தனர். வியத்மக என்னும் பெயரில், கோட்டாபயவுக்கு பின்னால், நாட்டின் பெரும்பாலான துறைசார் வல்லுநர்களும் வர்த்தகர்களும் அணிதிரண்டிருந்தனர். கோட்டாபயவின் தலைமையில் தங்களின் திட்டங்களை முன்னெடுக்கலாம் என்று எண்ணினர். ஆனால், தற்போது அந்த முயற்சி முற்றிலும் தோல்வியடைந்திருக்கின்றது.

குணதாச அமரசேகர, நளின் டி சில்வா போன்ற சிங்கள தேசியவாத கருத்தியலாளர்கள் பலர், கோட்டாபயவின் மூலம் சிங்கள - பௌத்த அரசியல் சாசனம் ஒன்றை கொண்டுவர முடியுமென்று நம்பியிருந்தனர். அவர்களின் இலக்கு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான, 13ஆவது திருத்தச் சட்டத்தை கொல்லுவதாகவே இருந்தது. ஆனால், இப்போது, தாங்கள நம்பிய அரசனையே, வெளியேறுமாறு சிங்கள மக்கள் கூறுகின்றபோது, மக்களுக்கு எதிராக அவர்களால் செயல்பட முடியாது. எனவே, அமைதியடைந்து விட்டனர். இந்த அமைதியின் பொருள், சிங்கள - பௌத்த தேசியவாதம் அமைதியடைந்துவிட்டது என்பதல்ல.

நாட்டின் நெருக்கடி நிலைமையால், சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகள், உறைநிலைக்கு சென்றுவிட்டனர். அவர்கள் நம்பிய ராஜபக்ஷக்களை பாதுகாப்பது தொடர்பில் சிந்தித்தால், மக்களின் எதிர்ப்பு அவர்களை நோக்கியும் பாயும். ஏனெனில், சிங்கள- பௌத்த தேசியவாதமென்பது, ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியுடன் முடிந்துவிடும் ஒரு விடயமல்ல - அது புதிய சூழலுக்கேற்ப, புதிய வடிவத்தை எடுக்கும். மக்கள் மீளவும் அமைதியாக தங்களின் கருமங்களை பார்த்துக் கொள்ளும் சூழல் வரும் வரையில், சிங்கள - பௌத்த தேசியவாதம் அமைதியாகவே இருக்கும்.

கோட்டாபயவுக்கு எதிராகக் களமிறங்கியிருக்கும் படித்த சிங்களவர்களும், சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் பலவீனங்கள் தொடர்பில் விவாதிப்பதற்கு முயற்சிக்கவில்லை. சிங்கள - பௌத்த தேசியவாத மனோநிலையின் கடந்த கால தவறுகள் தொடர்பில் சிங்களவர்கள் மத்தியில், பகிரங்க உரையாடல்கள் இடம்பெறாத வரையில், சிங்கள - பௌத்த தேசியவாதத்தை கேள்விக்குள்ளாக்க முடியாது. சிங்கள - பௌத்த தேசியவாதம் கேள்விக்குள்ளாகாத வரையில், இலங்கைத் தீவில் அடிப்படையான கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

# இடைக்கால அரசு!

அலசுவது இராஜதந்திரி

இன்றைய இலங்கை அரசின் நிலவரத்தை பொறுத்தவரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ “தமது தலையில் தாமே மண்ணை வாரி கொட்டியது“ போன்ற நிலைக்குள்ளாகியுள்ளார். தென்னிலங்கையில் Gota Go என்ற கோஷமே பலமாக திரும்புமிடமெல்லாம் ஒலிப்பதையும் காலிமுகத்திடலில் இன்று திங்கட்கிழமை பதினேழாவது நாளாகவும் மிகப்பலமாக பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் ஒலிப்பதையும் கேட்க முடிகின்றது.

இவ்வளவு மிக ஆக்ரோஷமான முறையில் மக்கள் கிளர்ந்தெழ ஆரம்பித்துள்ள நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவர் சார்ந்தோரும் தொடர்ந்தும் தமது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதிலேயே முனைப்பாக இருக்கின்றனர்.

இத்தகைய பின்னணியிலேயே தற்போதைய நிலமையை சமாளிக்கும் விதத்தில் இடைக்கால அரசாங்கமொன்றை தோற்றுவிப்பது சம்பந்தமான பேச்சுக்களும் பலமாக வெளிவர ஆரம்பித்துள்ளன.

நாட்டில் பொருளாதார ரீதியான குழப்ப நிலை, அரசியல் ரீதியான தளம்பல்நிலை ஆகியவை உருப்பெற்றுள்ள சூழலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக கொண்டு வருவதில் தாம் முன்னின்றமை பெருந்தவறென்பதையும் தமது தலையில் தாமே மண்ணை அள்ளி போட்டுவிட்டது போன்ற நிலையிலிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

சகோதரர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கிடையே தற்போதைய நாட்டு நிலவரம் காரணமாக கருத்து வேற்றுமைகள் வலுப்பெற்றுள்ளன. அத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ தரப்பினர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி நீக்கம் செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளனர். அதேசமயம் அமைச்சரும் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படவேண்டுமென்று கோரியுள்ளார். தமது சிறிய தகப்பனார் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்படவேண்டுமென்பதை இதன்மூலம் மறைமுகமாக நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளாரோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான முறுகல் நிலை வலுவடைந்துள்ளதையே இரு தரப்புக்கும் நெருக்கமானவர்கள் மூலமாக தெரிந்து கொள்ள முடிகின்றது. ஏனெனில், புதிய அமைச்சரவை ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரு வாக்கியுள்ளார். அந்த அமைச்சரவையின் பதவியேற்பு வைபவத்திற்குக்கூட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சென்றிருக்கவில்லை. தமது ஆலோசனை யின்றியும் சிபார்சு எது வுமின்றியும் புதிய அமைச்சரவையை ஜனாதி பதி அமைத்துள்ளார் என்பதே பிரதமர் மஹிந்தவின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

புதிய அமைச்சரவைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சில பெயர்களை சிபார்சு செய்திருந்தார். ஆனால்? அந்தப் பெயர்கள் எதனையும் ஜனாதிபதி ராஜபக்ஷ கருத்தில் கொள்ளவில்லை.



முன்பு அமைச்சு பொறுப்புகளை வகித்தவர்கள் பெரும் மோசடி பேர்வழிகள் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். எனவே இளையவர்களுக்கு இடமளித்து ஒரு புதிய ஊழல் மோசடியற்ற அமைச்சரவையே தமது தேவை என்று ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார.

பிரதமர் ராஜபக்ஷ சிபார்சு செய்தவர்களில் பலர் மோசடிப்பேர்வழிகள் என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பிரதமர் ராஜபக்ஷ சிபார்சு செய்தவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நெடுஞ்சாலைகள் அமைப்பது தொடர்பாக பல நிதி மோசடியில் ஈடுபட்டவர் என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ தமது புலனாய்வு தகவல்கள் முலமாக அறிந்துள்ளார்.

இதன்காரணமாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை புதிய அமைச்சரவையில் சேர்க்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ பழையவர்களையும் புதியவர்களையும் உள்ளடக்கிய அமைச்சரவையை உருவாக்கவும் ஆலோசனை கூறியிருந்தார். ஆனால் அதற்கும் முழமையாக ஜனாதிபதி ராஜபக்ஷ இணங்கவில்லை. இதன் காரணமாகவே தற்போது பிரத மராகவும் ஜனாதிபதியாகவுமிருக்கின்ற சகோதரர்களிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.


இடைக்கால அரசாங்கமொன்றும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுவடைந்துள்ள நிலையில் அத்தகைய இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்படுமாயின் அதன் பிரதமராகவும் தாமே இருக்கவேண்டுமெனவும் பிரதமர் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதேவேளை இடைக்கால அரசு என்ற புதிய நகர்வை நோக்கும் போது அந்த நகர்வு நாட்டு நலன் கருதியதாகவா அல்லது பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையின் வெளிப்பாடாக இருக்கின்றதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

அரசின் தற்போதைய இக்கட்டான நிலையை நோக்கும் போது இடைக்கால அரசோ அல்லது புதிய பிரதமரோ , ஜனாதிபதியோ இன்றைய தேவையல்ல.

ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கம் முற்று முழுதாக கலைக்கப்பட்டு புதிய அரசாங்கமொன்று மக்களால் தெரிவு செய்யப்படவேண்டுமென்பதே காலிமுகத்திடலில் நாளுக்கு நாள் பலமடைந்து வரும் கோஷமாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு






**மேடம்**
சுபச்செலவுகள் அதிகமானாலும் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். உங்களது திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்பு கிடைக்கும். பிறர் மனம் வருந்தும்படியாக நடந்து கொள்ளாதீர்கள்.

**இடபம்**
எதிர்பார்த்த நல்ல செய்தி உங்களைத் தேடி வரும். உடல்நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள். அக்கம்பக்கத்தினரிடம் கடுமை காட்ட வேண் டாம்.

**மிதுனம்**
எதிர்பாலினத்தினரின் விஷயத்தில் தலையிட வேண்டாம். இன்று மிகவும் கவனமாகச் செயல படுவதும் பேசுவதும் முக்கியம். குடும்பத்தில் திருமணப் பேச்சுவார்த்தை சாதகமாகும்.

**கடகம்**
புதிய வாய்ப்புகள் வரும்போது நன்கு பயன் படுத்துவீர்கள். பணிச்சுமையால் சோர்வு ஏற்பட் டாலும் உற்சாகமாக இருப்பீர்கள். கடந்த கால செயலுக்கு உண்டான நற்பலன் கிடைக்கும்.

**சிம்மம்**
பணியில் பொறுப்புடன் செயல்பட்டு நற்பெயர் எடுப்பீர்கள். உங்களுக்கு தேவையான பணம் உடனே கிடைக்கும். உடல் நலத்தில் கவனம் செலுத்தி நன்மை காண்பீர்கள் .

**கன்னி**
பழைய பிரச்னைகளை களைவதில் மும்முரம் காட்டுவீர்கள். எதிர்கால நன்மை கருதி தீட்டிய திட்டம் இன்று நிறைவேறும். சேமிப்பு உயரும். மேலதிகாரியால் இருந்த தொல்லை நீங்கும்.

**துலாம்**
பிறருக்கு நன்மை செய்வதால் நற்பலனும் ஆசியும் கிடைக்கும். எதிலும் அலட்சியம் வேண்டாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணி செய்யும் முறையில் மாற்றம் செய்து பலனடைவீர்கள்.

**விருட்சிகம்**
கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். செலவுகள் கட்டுப்படும். அரசியலில் முக்கியமான பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பிள்ளைகளால் பெருமிதம் அடையும் நாள். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு**
உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். தாயாருக்கு நன்மை வரும். பணியிடத்தில் தேவையற்ற பிரச் னைகளை சமாளிக்க வேண்டிவரும். எதிரிகளின் பலம் குறையும். வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்**
பரபரப்பாக செயல்படுவீர்கள். அலுவலகத்தில் எந்தவொரு திட்டத்தையும் யோசித்து செயல்படுத்து வீர்கள். நீங்கள் முயற்சித்த விஷயங்கள் தாமதத் துக்குப் பின் நிறைவேறும்.

**கும்பம்**
உங்களுக்கு வாக்குப்பலிதம் கூடும். செல்வாக்கு உயரும் குடும்பத்தில் நீண்ட காலமாக காத்திருந்த சுப நிகழ்வு உறுதியாகும். பணியாளர்களுக்கு பல காலத்திற்கு பிறகு நன்மை வந்து சேரும் நாள்.

**மீனம்**
பணியிடத்தில் இன்று எந்தவொரு அவசர முடிவை யும் எடுக்க வேண்டாம். பிறருடைய குடும்ப விஷ யங்களில் தலையிட வேண்டாம். உங்களின் நலம் விரும்புவோருக்கு நல்ல யோசனையை சொல்வீர் கள்.

# இந்தியா - இலங்கை இடையேயான மின்பாதை திட்டத்தை கைவிடுங்கள்!

## பா. ம. க. தலைவர் வலியுறுத்து



சென்னை, ஏப். 25

இந்தியா - இலங்கை கடல் வழி மின்பாதை திட்டத்தை கைவிட வேண்டும் என பாட் டாளி மக்கள் கட்சியின் நிறுவு நர் ராமதாஸ் வலியு றுத்தியுள்ளார்.

இலங்கைக்கு மின்சாரம் வழங்குவதற்கு வசதியாக தமி ழகத்தில் இருந்து இலங்கைக்கு கடலுக்கடியில் மின் பாதை அமைக்கும் திட் டத்தை செயல் படுத்துவது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுகள் மீண்டும் தொடங்கி யிருப்பதாக வெளியாகியுள்ள செய்தி கள் அதிர்ச்சியளிக்கின் றன. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அது நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும் என்பதை அரசு உணர வேண் டும்.

இவ்வாறு அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறியவை வருமாறு,

இந்தியாவில் உற்பத்தி செய் யப்படும் மின்சாரத்தை இலங்கைக்கு கொண்டு செல்வதற்கு வசதியாக மதுரையிலிருந்து இலங்கையின் அனுராதபுரம் பகுதிக்கு கடல் வழியாக மின் பாதை அமைக்கும் திட்டம் நீண்ட காலமாக இரு நாடு களின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

2000ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இத்திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் நடந்த போது, அதற்கு தமிழகத் தில் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. அதனால் அத்திட் டம் கைவிடப்பட்டது.

அதன்பின் 2010-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இந்தியா - இலங்கை இடையே மின்சார கோபுரங்களை அமைத்து மின்சாரத்தை கொண்டு செல்வதற்கு திட்ட மிடப்பட்டது. ஆனால், அந்தத் திட்டமும் தமிழ்நாட்டின் ஆதரவு இல்லாததால் கிடப்பில் போடப்பட்டது.

கடந்த 20 ஆண்டுகளில் இரு முறை கைவிடப் பட்ட இந்தியா - இலங்கை மின்பாதை திட் டத்தை மீண்டும் செயல்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மீண்டும் இந்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இந்த முயற்சி பொது வாக இந்திய நலனுக்கும், குறிப்பாக தமிழகத்தின் வளர்ச்சிக்கும் பாதகமாக அமையும் என்பதே உண்மை.

இலங்கைக்கு கடல் வழியாக மின்சாரப் பாதை அமைக்கும் திட்டம் குறித்து இதற்கு முன் பேசப் பட்ட போதெல்லாம் அதற்கு தமிழகத்தில் கடு மையான எதிர்ப்பு எழுந்தது. அதற்கான முக்கியக் காரணம், கடந்த காலங்களில் இத்திட்டம் குறித்த பேச்சுகள் தொடங்கப் பட்ட போது தமிழகம் கடுமை யான மின்வெட்டை எதிர் கொண்டு வந்தது. இப்போது தமிழகத்தின் மின்வெட்டு கட் டுப்படுத்தப்பட்டுவிட்ட போதிலும் கூட, இலங்கைக்கு மின்பாதை அமைப்பதை எதிர்க்க இன்னும் பல காரணங்கள் உள்ளன.

தவிர, இலங்கை போர்க் குற்றங்களை நிகழ்த் திய நாடு, தமிழர்களை இனப்படுகொலை செய்த நாடு, இத்த கைய குற்றங்களுக்காக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணையை எதிர் கொண்டு வரும் நாடு என்பதை மத்திய, மாநில அரசுகள் மறந்து விடக் கூடாது.

இலங்கை கடுமையான அரசியல், பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வரும் சூழலில், அந்நாட்டுக்கு கருணை அடிப் படையில் உதவிகளை செய்வது வேறு அந்நாட்டின் கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்த உதவுவது வேறு என்பதில் இந் தியா தெளிவாக இருக்க வேண் டும். அதேபோல், சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதாகக் கூறிக்கொண்டு, கண்களை மூடிக் கொண்டு இலங்கைக்கு உதவுவதும் தவறாகும்.

இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் ஒருபோதும் இந்தியா வுக்கு எதிராக அமைந்து விடக் கூடாது. பாகிஸ்தானின் பக்கம் இலங்கை சாய்ந்து விடக் கூடாது என்பதற்காக கச்சத்தீவை தாரை வார்த்ததன் விளைவை இப்போது வரை தமிழகம் தான் அனுபவித்துக் கொண்டிருக் கிறது.

அதேபோல், சேது கால்வாய் திட்டத்தை தாரை வார்த்து இலங்கைக்கு மின்பாதை அமைப்பதன் பாதிப்பையும் தமிழகம்தான் அனுபவிக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு இலங்கை - இந்தியா மின் பாதையை மத்திய அரசு கை விட வேண்டும் - என்று கூறி யுள்ளார். (ஐ)

# மதுக்கடைகளை மூடுவோம் என்று தேர்தல் வாக்குறுதியில் கூறவில்லை!

## கனிமொழி எம். பி. சொல்கிறார்



கன்னியாகுமரி, ஏப். 25

தி.மு.க தேர்தல் வாக்குறுதியில் மதுக்கடை களை முழுவதுமாக மூடுவோம் என்று எதுவும் கூறவில்லை. என்று அந்தக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினரான கனிமொழி கூறியுள்ளார்.

கன்னியாகுமரி மாணவிகளுடன் ஒரு கலந்துரையாடலில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி நேற்று முன்தினம் கலந்துகொண்டார்.

கனிமொழியிடம் மாணவர்கள் கேள்விகளை எழுப்பினர். அவற்றுக்கு அவர் பதிலளித்தார். இதன்போது ஒரு மாணவி, “தேர்தல் நேரத்தில மதுவை ஒழிப்போம் என்று சொல்லியிருந்தீர்கள். தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப் படுமா? என்று கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த கனிமொழி எம்.பி, ‘‘தி.மு.க தேர்தல் வாக்குறுதியில் மதுக்கடைகளை முழுவ துமாக மூடுவோம் என்று எதுவும் கூறவில்லை. ஆனால், கடைகளை படிப்படியாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

ஆனாலும், விடாத மாணவிகள் மதுவிலக்கு பொலிஸாரே மதுக்கடைகளில் இருந்து பறிமுதல் செய்து கொண்டு வரும் மது போத்தல்களை எடுத்துவந்து பயன்படுத்தி வருகின்றனர். மதுக் கடைகளில் பொலிஸாருக்கு மது விற்பனை செய்யக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதில் கூறிய கனிமொழி எம்.பி, “மதுக் கடைகளில் 18 வயது ஆகிவிட்டதா என பார்த்து தான் மது கொடுக்கிறார்கள். ஆனால் நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள் எனப் பார்த்து மது வழங்குவது இல்லை. அதனால் பொலிஸார் என்று தனியாக தரம்பிரித்து மது வழங்காமல் இருக்க முடியாது. அதே நேரத்தில் பணியில் இருக்கும் காவலர்கள் மது அருந்தி வந்தால் அவர் கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப் படும்” என்றார். (ஐ)

ஈழநாடு





# தீவகத்தில் 300 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கல்!

யாழ்ப்பாணம்,ஏப்.25

தீவகத்தில் உதவி தேவைப்படும் குடும்பங்கள் மற்றும் பெண் தலைமை குடும்பங்களுக்கு இடர்கால உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நேற்று முன்தினம் இந்த உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேச செயலர், கிராம சேவகர்கள், சமூகப் பணியாளர்களுடன் இணைந்து அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, வேலணை, சரவணை, நயினாதீவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற பகுதிகளை சேர்ந்த 300 குடும்பங்களுக்கு 3,350 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற உணவு தட்டுப்பாடு, உணவுப் பொருட்களுக்கான விலை ஏற்றம் காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவங்களை கொண்ட குடும்பங்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்

இதனை கருத்தில் கொண்டு மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கு நிவாரண பணிகள் நடைபெற்று வரும் நேரத்தில் தீவக மக்களின் நலனை கருத்தில் கொண்டு நிவாரண பணிகள் வழங்கி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடமராட்சி கிழக்கு கூட்டுறவில் மோசடி; ஐவர் கொண்ட விசாரணை குழு நியமனம்!

வடமராட்சி, ஏப்ரல் 25

**பல்வேறு மோசடிகளால் பல இலட்சம் ரூபாய் கடனில் இயங்கும் வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டதுடன், மோசடிகளை விசாரிக்க ஐவர் கொண்ட விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டது.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் முன்னாள் தலைவர் சிவலிங்கம் சிறிகலாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், புதிய தலைவராக த. தங்கரூபன் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் சேர்த்து ஆறு இயக்குநர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த காலங்களில் வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் இடம் பெற்றவை என்று கூறப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்த பொதுச்சபை உறுப்பினர் இ. முரளீதரன் தலைமையில் ஐவர் கொண்ட விசாரணை குழுவும் நியமிக்கப்பட்டது.



இதேவேளை வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக்கு தடையாகவும், பல இலட்சம் ரூபாய் கடன் ஏற்படவும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமே காரணம் என்றும் கூட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

2010ஆம் ஆண்டு பொதுச்சபையை கூட்டி முடிவு எடுக்காது தன்னிச்சையாக 96 இலட்சம் ரூபாயை பெற்று நுகர்ச்சிக்கு பயன்படுத்தியமை. முறையற்ற நிதி முகாமைத்துவம் என்பன ஜனநாயக விரோத செயல் என்றும் சாடப்பட்டது.

இதேவேளை தற்போது 40 இலட்சம் ரூபாய் கடன் சங்கத்தின் பெயரில் உள்ளது என்றும் இதனால் சங்கத்தின் காணி ஒன்றை விற்பனை செய்து கடனை மீள செலுத்துவதற்கும் பொதுச்சபை அனுமதியளித்துள்ளது.

இருபதுக்கு மேற்பட்ட கடைகளை கொண்டிருந்த வடமராட்சி கிழக்கு பல. நோக்கு கூட்டுறவு சங்கம் தற்போது ஒரேபொரு கிளையுடன் இயங்குவதாகவும் பணியாளர்களுக்கு 14 மாத சம்பளம் நிலுவையிலுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐஸ் போதைப் பொருள் விற்ற இளைஞர் கைது!

முல்லைத்தீவு, ஏப். 25

ஐஸ் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இளைஞர்களை இலக்கு வைத்தும், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தும் ஐஸ் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுகின்றன என்று பொலிஸ் புலனாய்வுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் இரவு புதுக்குடியிருப்பு மந்துவில் பிரதேசத்தில் விசேட நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போதே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 455 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது. அத்துடன், அவரின் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

கைதானவர் 26 வயது நபர் என்றும், அளம்பில் - உப்புமாவெளியை சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போராட்டத்தை ஆதரிப்பது தொடர்பில் தமிழருக்கு யாரும் படிப்பிக்காதீர்கள்!

## சிவசக்தி ஆனந்தன் சீற்றம்

வவுனியா, ஏப். 25

போராட்டம் ஒன்றை எப்படி எந்த சந்தர்ப்பத்தில் ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க தேவையில்லை என முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிரான போராட்டங்களில் தமிழ் மக்கள் மௌனமாக இருக்கின்றனரே என்று ஊடகம் ஒன்று அவரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தப் பதிலில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“தமிழர்கள் மௌனமாக இருக்கவில்லை. பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுகளால் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால், கோட்டாவை வீட்டுக்குப் போ என்று கோசமிடும் சிங்கள மக்கள், பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணத்தை அறிய விரும்புகின்றார்களா? கோட்டாபயவின் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் மோசடி மாத்திரமே விலைவாசி உயர்வுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் காரணமல்ல.



இனரீதியாக வகுக்கப்பட்ட அரசியல் பொருளாதாரத் திட்டங்கள் தற்போதைய நெருக்கடிக்குக் காரணம். இதனை வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் துணிவோடு வெளிப்படுத்த வேண்டும்?

30 ஆண்டுகால போருக்குச் செலவிட்ட தொகை பற்றி எந்தவொரு அரசியல் கட்சிகளும் பாராளுமன்றத்தில் விளக்கம் கோரவில்லை. 2009இற்குப் பின்னரான சூழலில் வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள் நவீனமயப்படுத்தும் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டமை, சிங்களக் குடியேற்றங்கள், புத்தர் விகாரை அமைக்கப்பட்டமை புத்தர் சிலைகள் வைக்கப் படுகின்றமை போன்ற இனரீதியான திட்டங்களுக்குரிய நிதி எங்கிருந்து பெறப்பட்டன? இது பற்றி ஜே.வி.பிகூட பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பவேயில்லை.

ஆகவே, கோட்டாவுக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் மக்கள் மௌனமாக இருப்பதாக யாருமே கூற முடியாது. தமிழ் மக்களுக்கு வலிகள் ஏராளம் போராட் டத்தை எப்போது ஆதரிப்பது என்பது குறித்து தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை - என்றார். (ஐ)

# சிலிண்டர், பணம் வழிப்பறி; 20வயது இளைஞர் சிக்கினார்!

## யாழ். பொலிஸார் அதிவிரைவு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25

எரிவாயு சிலிண்டரை கொண்டு சென்ற ஒருவரை மறித்து பொலிஸ் புலனாய்வு பிரிவினர் என்றுகூறி சிலிண்டர் மற்றும் பணத்தை பறித்துச் சென்ற நால்வரில் ஒருவரை பொலிஸர் சில மணி நேரங்களிலேயே பிடித்தனர்.

யாழ்ப்பாணம் மாநகரின் கஸ்தூரியார் வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இந்த வழிப்பறி இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

சிலிண்டருடன் வீதியில் சென்றவரை மறித்த நால்வர் தம்மை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் எனத் தெரிவித்து அவரை மிரட்டி அவர் எடுத்துச் சென்ற எரிவாயுவுடனான சிலிண்டர் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணத்தையும் அபகரித்து தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அவரின் தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சில மணி நேரங்களிலேயே கந்தர்மடத்தைச் சேர்ந்த 20 வயது நபர் ஒருவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டன.

ஏனைய மூவரையும் கைது செய்ய தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# இரணைமடு குளத்தின் கீழ் 20,022 ஏக்கரில் சிறுபோகம்!

கிளிநொச்சி, ஏப். 26

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுவில் தற்போதைய நீரின் அளவைக் கொண்டு 2 ஆயிரத்து 22 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு போக நெல் செய்கையில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைநாட்களாக பெய்துவரும் மழையால் கிளிநொச்சியில் பல குளங்களில் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது. இந்நிலையில், இரணைமடு குளத்தின் நீர்மட்டம் நிறைவு மட்டத்தை எட்டியுள்ளது. இதையடுத்து நெல் பயிர் செய்கையை அதிகப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

முன்னர், இரணைமடுவின் கீழ் 16,211 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெல் செய்கையை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில் நீர் மட்டம் அதிகரித்தமையால் 20,022 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெல் செய்கையை முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது. (ஐ)

# கடனை உடன்செலுத்துங்கள் அரபு இராச்சியம் அழுத்தம்!

கொழும்பு, ஏப். 25

**இலங்கை உடனடியாக கடன்நிலுவைகளை செலுத்த வேண்டும் என்று ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரபல எண்ணெய் நிறுவனம் பெரும் அழுத்தங்களை பிரயோகித்துள்ளது.**

ஐக்கிய அரபு இராச்சிய நிறுவனத்திடம் இருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யும் எண்ணெய்க்கான கடன் கொடுப்பனவையே உடன் செலுத்துவமாறு அந்த நிறுவனம் அழுத்தம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டு கடன்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் என்பவற்றுக்கான கடன் வழங்கலை இலங்கை அரசாங்கம் பிற்போட்ட நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

கடன் தொகையை கோரும் நிறுவனம் இலங்கைக்கு 95 ஆயிரம் மெற்றிக் தொன் எண்ணெயை இலங்கைக்கு விநியோகித்து அதற்கான கொடுப்பனவை வழங்க 200 நாட்கள் காலவகாசம் வழங்கியிருந்தது.

எனினும், தற்போது 80 நாட்களுக்குள் தமக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என இலங்கையை அந்த நிறுவனம் நிர்ப்பந்திப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஏனைய எண்ணெய் நிறுவனங்களும் இதே நிலையை பின்பற்றலாம் என்று கூறப்படுகின்றது.

சவுதி அரேபியா, குவைத் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் உள்ள எண்ணெய் விநியோக நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளும் பிற்போடப்பட்டுள்ளன என்று திறைசேரி தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)



## கனவுகளுக்கு இறுதி ஊர்வலம் பல்கலை. மாணவர் நடத்தினர்!

கொழும்பு, ஏப். 25

“இளைஞர்களின் கனவுகளுக்கு இறுதி ஊர்வலம்” எனும் தொனிப்பொருளில் நேற்று மாலை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் மலர்வலயம் கொண்டுவரப்படுகின்றது. அத்துடன், சவப்பெட்டியையும் ஏந்தியவாறு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## கடன்களை மீளச் செலுத்துதல் கையாள்வதற்கு ஆலோசகர் குழு

கொழும்பு, ஏப். 25

இலங்கைக்கு கடன்களை வழங்கியவர்களுடன் பேச்சுக்களை விரைவுபடுத்தவும், சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியை நோக்கி நகரவும் திட்டமிட்டு வருவதாக நிதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

சர்வதேச நாணயநியத்துடனான பேச்சுக்கள் சாதகமான சமிக்ஞைகளையாகவுள்ளன. இந்த நிலையில் இலங்கையின் நிலையற்ற கடன்களை மைக்ரோ பொருளாதாரத்தின் ஊடாக சரி செய்தல் அல்லது வரிகளை அதிகரிப்பதன் ஊடாக சரி செய்தல் ஆகிய வற்றின் மூலமாக மட்டும் முன்னெடுத்து விடமுடியாது.

ஆகவே, கடன்களை செலுத்த வேண்டிய காலத்தை கடந்து முதிர்வடையும் கடன்களை கவனத்தில் கொண்டு மறுசீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. சர்வதேச நாயணய நிதியமும் இவ்விதமான நிலைப்பாட்டடையே கொண்டுள்ளது. ஆகவே மீளச் செலுத்தும் கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்காக, கடந்த 12ஆம் திகதி மீளக் கடன்களைச் செலுத்தும் செயல்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம்.

இந்நிலையில் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் தொழில்நுட்ப செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

ஆகவே, முதற்கட்டமாக கடன்களை மீளச்செலுத்தல் உள்ளிட்ட விடயங்களை கையாள்வதற்காக அடுத்த இரு வாரங்களுக்குள் ஆலோசர்கள் நியமிக்கப்படவுள்ளோம்.

இந்த ஆலோசர்கள், நிதி, கடன்கள் மற்றும் மறுசீரமைப்பு குறித்து கவனம் செலுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர் - என்றார். (ஐ)

## வெளிநாட்டு உதவிகளைப் பெற சுகாதார துறைக்கு புதிய கணக்கு!

கொழும்பு, ஏப். 25

ஔடத இறக்குமதிக்காக வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் டொலர்களை வைப்பிலிடக் கூடிய புதிய கணக்கு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட கணக்குக்கு தேவையான அனுமதியைப் பெறுவதற்கான கோரிக்கை நிதி அமைச்சில் முன்வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் நன்கொடைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பொறுப்பான ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

ஔடத இறக்குமதிக்கு தேவையான டொலர்களை நன்கொடையாக வழங்க விரும்பும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் எந்தவொரு தரப்பினரும் இந்த புதிய கணக்குக்கு டொலர்களை அனுப்ப முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து, சீனா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுடன் இலங்கைக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பிலான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

இதனிடையே, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றுடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் இலங்கைக்கு மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கான உதவிகளை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## சவர்க்கார வகைகளின் விலைகளும் எகிறின!

கொழும்பு, ஏப். 25

நாட்டில் சவர்க்காரங்களின் விலைகளை சவர்க்கார இறக்குமதி நிறுவனங்கள் திடீரென உயர்த்தியுள்ளன.

இதற்கமைய, 70 ரூபாய்க்கு விற்பனை செய்யபட்ட ஆடைகளை தோய்க்கும் சவர்க்கார வகை 115 ரூபாய் தொடக்கம் 150 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான சவர்க் கார வகைகள் 175 ரூபாயாக வும், வாசனை சவர்க்காரம் 145 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட் டுள்ளது.

அத்துடன், இந்த விலை அதிகரிப்புடன் சலவைத் தூள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மற்றும் ஷம்போ மற்றும் பற்தூரிகை என்பவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## 2009இல் இராணுவம் காண்பித்தது உண்மையான பிரபாகரன் அல்ல!

### காலிமுகத்திடலில் கிளம்பியது புதிய புரளி

கொழும்பு, ஏப். 25

சுனாமித் தாக்கத்திலேயே பிரபாகரன் மரணித்து விட்டார். 2009 இல் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்ததாக இராணுவம் காண்பித்தது உண்மையான பிரபாகரன் அல்ல என்று காலிமுகத்திடல், ‘கோட்டா கோ கம’வில் பதாதையுடன் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

நீல் தம்மிக்க குணதிலக என்ற நபர் இது குறித்து சில தகவல்கள் குறிக்கப்பட்ட பதாதையொன்றுடன், காலி முகத்திடல் போராட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

அந்த பதாதையில், தற்போதைய ஆட்சியாளர்களை குறிப்பிட்டு, திருடர்கள் நாயகர்களாக முடியாது, நாயகர்கள் திருடர்களாக இருக்க மாட்டார்கள் - என்றும் எழுதியுள்ளார். (ஐ)




## சிவராம் நினைவுதினத்தில் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு!

மட்டக்களப்பு, ஏப். 25

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் த. சிவராமின் நினைவு தினத்தை எதிர்வரும் 29ஆம் திகதி மட்டக்களப்பில் நினைவேந்தப்படவுள்ளது. அன்றைய தினம் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வரும், 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளருக்கு மட்டக்களப்பு மாநகரில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும் நாட்டில் இடம்பெற்றுவரும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்தும் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வுகளில் அனைவரையும் பங்கேற்கு மாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)




# அரசாங்கத்துக்கு எதிராக ஹற்றனில் ஆர்ப்பாட்டம்!

ஹற்றன், ஏப். 25

அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வுக்கும், அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஹற்றனில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

"ஒன்றிணைந்த இளமை ஹற்றனில் தொடக்கம்" என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் ஹற்றனிலுள்ள தனியார் ஆடை தொழிற்சாலையின் பெண்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டகாரர்கள் ஆர்ப்பாட்டத்தை ஹற்றன் எம்.ஆர். நகரத்தில் உள்ள எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்து, அதன்பின் ஊர்வலமாக வந்து மணிக்கூட்டு கோபுரத்தின் முன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

உலகத்தின் முன் தாய் நாட்டை கேவலமாக்காதே, பசிக்கு நிறம் மதம் கிடையாது, விலை குறை அடுத்த தலைமுறை வாழ வேண்டும், ரம்புக்கனை இளைஞனுக்கு நீதி வேண்டும், சிறார்களின் கல்வியை நாசம் செய்யாதே, போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை காட்சி படுத்திய வண்ணம், கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# உத்தேச அரசமைப்பு திருத்தம் குறித்து ஆராய்வதற்கு கூடுகிறது தெரிவுக்குழு!

கொழும்பு, ஏப். 25

**உத்தேச அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலான யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு பாராளுமன்ற விவகாரம் தொடர்பிலான தெரிவு குழுவின் உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் நடைபெறவுள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்துடன் நிதியமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட பிரதிநிதிகள் மேற்கொண்ட பேச்சின் முன்னேற்றம் தொடர்பில் அமைச்சின் அறிக்கைக்கு பிரகாரம் நிதியமைச்சர் எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி ஆற்றவுள்ள விசேட உரையைத் தொடர்ந்து காலை 11.00 மணிமுதல் மாலை 05.30 மணிவரை பாராளுமன்ற கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற விவகாரம் தொடர்பிலான தெரிவு குழு கூட்டத்தின்போது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 04, 05 மற்றும் 06 ஆகிய தினங்களில் பாராளுமன்ற கூட்டத் தொடர் இடம்பெறும். 06ஆம் திகதியை தவிர்த்து ஏனைய இரு தினங்களில் காலை 10மணி முதல் காலை 11.00 மணிவரை வாய்மொழி மூலமான கேள்வி வினவப்படும்.

மே மாதம் 05ஆம் திகதி காலை 10 மணிக்கு பாராளுமன்றம் கூடுவதுடன் சிறீ சாக சிங்காராம விகாரை படையணி சட்டமூலம் மீளாய்வு செய்யப்படும். அதனை தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட கோப் குழு அறிக்கை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதம் காலை 10 மணிமுதல் மாலை 05.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

அத்துடன், உத்தேச அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலான யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு பாராளுமன்ற விவகாரம் தொடர்பிலான தெரிவு குழுவின் உறுப் பினர்களுக்கிடையிலான சந்திப்பு எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

(ஐ)

# சிறுமியின் உயிருக்கு எமனானது ஜம்புக்காய்!

ஜம்புக் காய் தின்ற சிறுமி ஒருவர் மூச்சுத் திணறி உயிரிழந்தார். குருநாகல் வாரியப்பொலை பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் சிறுமி நாரம்மல, தங்கொல்ல பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இளைய மகளாவார். வாரியபொலை ஹம்மாலிய பிரதேசத்தில் உள்ள தனது தாத் தாவை பார்க்க தாயாருடன் சென்றபோதே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ள.

சிறுவர்களுடன் முற்றத்தில் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்த போது குழந்தையின் தொண்டையில் ஜம்புக்காய் சிக்கியதாக சிறுமியின் தாத்தா கூறுகிறார். வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது சிறுமி உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# செயன்முறை பரீட்சை 29ஆம் திகதி ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 25

நடந்து முடிந்த 2021 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்த செயன்முறை பரீட்சை எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

# இலங்கையை காப்பாற்றுங்கள் நியூசிலாந்திலும் கவனவீர்ப்பு!

ஹமில்டன், ஏப். 25




அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஆதரவாக நியூசிலாந்தின் ஹமில்டனில் பெருமளவான இலங்கையர்கள் கோஷங்கள் எழுப்பியும், கொடிகள், பதாதைகளை ஏந்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையைக் காப்பாற்ற உதவுங்கள், அப்பாவி இலங்கையர்களைக் கொல்வதை நிறுத்துங்கள், ராஜபக்ஷ குடும்பம் திருடிய பணத்தை திருப்பி தர வேண்டும் என்ற கோஷங்களை அவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஆட்சியாளர்களின் தவறான முகாமைத்துவமே காரணமென சுட்டிக் காட்டி, ஆட்சியாளர்களை பதவி விலக வலியுறுத்தி போராட்டங்கள் நடந்து வருகிறது. இதற்கு ஆதரவாக நியூசிலாந்திலும் போராட்டம் நடைபெற்றது. ஹமில்டனில் போராட்டம் நடத்தும் மக்களுக்கு ஆதரவாக வாகன சாரதிகளும் ஒலியெழுப்பி ஆதரவு தெரிவித்தனர்.

(ஐ)

# சதொசவில் வரிசையில் நின்றோருக்கு அரிசி வழங்கினார் சுற்றுலா பயணி

கொழும்பு, ஏப். 25

இலங்கை வந்துள்ள இஸ்ரேலிய சுற்றுலா பயணியொருவர், அரிசி வாங்க வரிசையில் நின்ற மக்களிற்கு தனது செலவில் அரிசி வாங்கிக் கொடுத்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாத்தறை - வெலிகமை பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாடு முழுவதும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, விலையேற்றம் என மக்கள் வாழ முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பக்கம் திரும்பினாலும் ஏதாவது ஒரு வரிசை நிற்கிறது. இவ்வாறே, வெலிகமையிலுள்ள சதொச விற்பனை நிலையத்தில் அரிசி வாங்க மக்கள் வரிசையில் நின்றுள்ளனர்.

210 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் அரிசி, சதொச நிறுவனத்தில் 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக பரவிய தகவலையடுத்து, ஏராளமாக மக்கள் சதொசவின் முன்பாக கொளுத்தும் வெயிலில் வரிசையில் நின்றுள்ளனர்.




இஸ்ரேலில் இருந்து இலங்கை வந்துள்ள சுற்றுலா பயணியான கிரே ரோசம்பிரக் என்பவர் அந்த வழியால் காரில் சென்று கொண்டிருந்த போது, வரிசையை கவனித்து, அது பற்றி விசாரித்துள்ளார்.

அரிசி வாங்க வரிசையில் நிற்கிறார்கள் என்பதை தெரிந்ததும், அங்கு வரிசையில் நின்ற 129 பேருக்கு தலா 5 கிலோ அரிசியை கையளித்ததுடன் மருந்து வாங்க வந்தவர்களுக்கு தலா 2000 ரூபாயும் வழங்கினார். சுற்றுலா பயணியின் நண்பரான பிக்கு ஒருவரும் இதன்போது உடனிருந்தார்.

கிரே ரோசம்பிரக் பௌத்த மதத்தைப் படிப்பதற்காக பல வருடங்களாக இலங்கைக்கு அவ்வப்போது வந்து செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 21ஆவது திருத்த சட்டத்தால் பாராளுமன்றம் பலம் பெறும்

கொழும்பு, ஏப். 25

21ஆவது திருத்தத்துக்கு அமைவாக பாராளுமன்றம் பலம் பொருந்திய அமைப்பாகக் காணப்படும் என்று, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டு மக்களுக்கும் ஊடகங்களுக்கும் போதிய தெளிவு இல்லை.

இதில் முதலாவதாக உள்ள விடயம் என்னவெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி விட்டு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் ஜனாதிபதியை தெரிவுசெய்வதாகும். இதற்கூடாக பாராளுமன்றம் பலம் பொருந்திய அமைப்பாக காணப்படும்.

பாராளுமன்றமே ஜனாதிபதியை தெரிவுசெய்யும். எனவே ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்ட பிரதமரின் ஆலோசனைகளுக்கு அமைவாக செயல்படுவார். இதுவே 21ஆவது திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முதலாவது யோசனையாகும்.

புதிய திருத்தத்துடன் வரும் ஜனாதிபதி, பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டியவராக இருப்பார். பாராளுமன்றத்துக்கு பதிலளிக்க வேண்டும். இது இரண்டாவது யோசனையாகும். இதுபோன்ற யோசனைகளே இந்த திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் ஆட்சி மாற்றமொன்று ஏற்படும். மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் பொருந்திய அமைப்பாக பாராளுமன்றம் இருக்க வேண்டும் - என்றார். (ஐ)



# அவுஸ்திரேலியாவில் தேர்தல் பிரச்சாரம் கடினமாகின்றதா?

## பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தும் தேர்தல்

அவுஸ்திரேலியாவில் கொவிட் பெருந்தொற்று கடந்த சில மாதங்களாகவே அதிகரித்திருந்தது. தற்போது ஓரளவு தணிகின்றது. அத்தகைய சூழலிலேயே பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பெருந்தொற்றுக்காலம் என்பதால் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய தேர்தலாகவே இது கருதப்படுகின்றது. பெருந்தொற்றுக் காலத்திலே தேர்தல்களை நடாத்துவது அவுஸ்திரேலியாவுக்குப் புதிதல்ல. ஏற்கனவே, குவின்ஸ்லாந்து, மேற்குஅவுஸ்திரேலியா, தெற்கு அவுஸ்திரேலியா மாநிலங்களிலும், டெரிடரி என்று சொல்லப்படுகின்ற இரண்டு குறுநிலப்பரப்புகளிலேயும் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அந்தவகையிலே, பேரிடர்காலத் தேர்தல் அனுபவத்தை அவுஸ்திரேலியா கொண்டிருக்கின்றது.

தேர்தலில் வாக்களிப்பது அவுஸ்திரேலியாவில் கட்டாயமனாதாகும். வாக்களிக்கத் தவறுகின்ற பட்சத்தில் தண்டப்பணம் விதிக்கப்படுகின்றது.

பொதுத்தேர்தல் வாக்காளிப்பு மே 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கு முன்னரும்கூட, நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வாக்களிக்கலாம். ஆனால், அதற்கான முன்பதிவுகளைச்செய்வதற்கு வரைமுறைகள் உள்ளன. தற்போதைய தொற்றுப்பரவல் காரணமாக தபால் வாக்களிப்பை அதிகமானோர் நாடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தபால் மூலம் வாக்களிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது வாக்குஎண்ணிக்கை தாமதப்படலாம். அதனால், தேர்தல்முடிவு வெளியாகவும் தாமதமாகலாம் எனக் கருதப்படுகின்றது.

சுமார் ஒரு லட்சம் பணியாளர்கள் பொதுத்தேர்தல் தேர்தல் பணிக்காக மேலதிகமாக அமர்த்தப்படுகின்றனர். வாக்களிப்பு நிலையங்களைச் சுகாதார முறையில் சுத்தம் செய்கின்றவர்கள், கொவிட் சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்துகின்றவர்கள் எனப் பல்வேறு பணியாளர்களும் அதிலே அடங்குகின்றனர்.

அவுஸ்திரேலிய பாராளுமன்ற முறையிலே செனட் சபையும் உள்ளது. அது 76 அங்கத்தவர்களைக் கொண்டதாகும். ஆறு மாநிலங்களிலேயிருந்து தலா பன்னிரண்டு அங்கத்தவர்களும், இரண்டு குறுநிலப் பரப்புகளிலேயிருந்து தலா இரண்டு அங்கத்தவர்களுமாக செனட்சபை அமைக்கப்பட்டிருக்கின்றது. மாநிலங்களின் சனத்தொகை அல்லது பொருளாதார அளவீடு என எத்தகைய பாகுபாடுமின்றி, அனைத்து மாநிலங்களுக்கும் சமமான அளவிலேயே செனட் அங்கத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால், அனைத்து மாநிலங்களும் சமம் என்பது உறுதிசெய்யப்பட்டிருக்கின்றது. நூதன விகிதாசாரத் தேர்தல் முறையிலேயே அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அதனூடாக, பெரிய மற்றும் சிறிய கட்சிகள், சுயாதீனமான நிலைப்பாடு கொண்டவர்கள் என பல்வேறு தரப்பினருக்குமே செனட் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவாக, விகிதாசார தேர்தல்முறையில் பெரும்பான்மைப் பலம் எளிதாக அமைந்துவிடுவதில்லை. அதுவே அவுஸ்திரேலிய செனட் சபையிலும் நடைபெறுகின்றது. எந்தவொருதரப்புக்குமே பெரும்பான்மை அநேகமாகக் கிடைப்பதில்லை. அவ்வப்போது சில விதிவிலக்குகள் ஏற்படுவதும் உண்டு.

ஆட்சியமைப்பதற்கு செனட்சபையில் பெரும்பான்மை இருக்கவேண்டியதில்லை. பாராளுமன்றத்தில் மட்டுமே பெரும்பான்மை அவசியமாகும். இது, அவுஸ்திரேலியப் பாராளுமன்ற முறையின் குறிப்பிடத்தக்கதொரு சனநாயக அம்சமாகும்.

பாராளுமன்றத்திலே பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிசெய்கின்ற தரப்புக்கு, செனட்சபையின் ஆதரவு அவசியமாகின்றது. செனட்சபையிலுள்ள வெவ்வேறு கட்சிகளுடன் அல்லது குழுக்களுடன் அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். பல்வேறு விடயதானத்திலும் செனட்டில் ஆதரவைத் திரட்டவேண்டியது தேவையாகிவிடுகின்றது. செனட்சபையின் ஆதரவின்றிச் சட்டங்களை இயற்றமுடியாது. ஆட்சியதிகாரத்தைப் பிரயோகிக்கமுடியாது. அதனால், பல்வேறு தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தை மூலமாக ஆதரவைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சிசெய்கின்ற தரப்புக்கு எப்போதுமே உண்டு.

அந்தவகையிலே, பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிசெய்கின்றவர்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும், தேவையேற்படின் மீளாய்வுக்கு உட்படுத்தும் பொறுப்பும் செனட்சபைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறாகவே அவுஸ்திரேலியாவின் சனநாயகமரபு உயிர்ப்புடன் பேணப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் 151 அங்கத்தவர்கள் உள்ளனர். தொகுதிவாரித் தேர்தல்முறை மூலமாகவே அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். சனத்தொகையின் அடிப்படையிலே தொகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அந்தவகையிலே, அதிக சனத்தொகையைக்கொண்ட நியூசவுத்வேல்ஸ் (சிட்னி), விக்டோரியா (மெல்பேர்ண்) போன்ற மாநிலங்களிலே அதிக தொகுதிகள் காணப்படுகின்றன.

ஆட்சியமைப்பதற்கு 76அங்கத்தவர்களின் ஆதரவு தேவையாகும். தற்போதைய பாராளுமன்றத்தில் 76அங்கத்தவர்களுடனேயே லிபரல் - நஷனல் கூட்டணி



ஆட்சி செய்கின்றது. எதிர்கட்சியான தொழிற் கட்சி 68அங்கத்தவர்களைக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில், அவுஸ்திரேலிய அரசியலில் எதிர்கட்சியும் பலமானதாகவே காணப்படுகின்றது.

தற்போது ஆட்சியிலுள்ள லிபரல்-நஷனல் கூட்டணியும், மறுபக்கத்தில் தொழிற் கட்சியும் பெரியசக்திகளாகக் காணப்படுகின்றன. கடந்த மூன்று தேர்தல்களிலும் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற லிபரல்-நஷனல் கூட்டணி, தற்போதைய தேர்தலில், ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள விரும்புகின்றது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இழந்த ஆட்சியைக் கைப்பற்ற தொழிற் கட்சி போராடுகின்றது.

கொவிட் பெருந்தொற்று, ரஷ்ய-உக்ரைன் மோதல் என்பவற்றினால் பொருளாதார பாதிப்புக்கள் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றன. பொருளாதார வீழ்ச்சி ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களே வாக்காளர்களின் முக்கிய அச்சமாகக் காணப்படுகின்றது. வாழ்கைச் செலவு அதிகரிப்பு, வேலைவாய்ப்புக்களில் வீழ்ச்சி போன்ற விடயங்களை எந்தக் கட்சியினால் திட்டவட்டமாகக் கையாளமுடியும் என்பதே வாக்காளர்களின்முன் இருக்கக்கூடிய மிகப்பெரிய கேள்வியாகும்.

ஒருகாலத்தில் வலதுசாரி லிபரல்-நஷனல் கூட்டணிக்கும், இடதுசாரி தொழிற் கட்சிக்குமிடையில் கொள்கைரீதியாக தெளிவான வேறுபாடுகள் காணப்பட்டன. அத்தகையநிலை பல்வேறு மேற்கத்தைய தேசங்களிலேயும் மாறியிருக்கின்றது. அதற்கு அவுஸ்திரேலியாவும் விதிவிலக்கல்ல.



**நியூசிலாந்து சிற்சபேசன்**

வலதுசாரி கட்சிகளும், இடதுசாரி கட்சிகளும் கொள்கைரீதியாக நடுநிலையான புள்ளியை அண்டியதாகவே தற்போது காணப்படுகின்றன. கட்சிகளிடையே கொள்கைரீதியான வேறுபாடுகளைக் காண்பது கடினமாகியிருக்கின்றது.

அதனால், பிரதமர் வேட்பாளரை முன்னிலைப்படுத்தியே அவுஸ்திரேலியாவில் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. எந்தக் கட்சியின் கொள்கைகள் பொருளாதாரத்தை மேம்படுத்தும், வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு பிரதமர் வேட்பாளரும் எப்படிச் செயற்படுவார், பிரதமர் வேட்பாளரின் கடந்தகாலம் எப்படியிருந்தது என்பதாக, தனிநபர்களை முன்னிலைப்படுத்தி தேர்தல் பிரச்சாரம் நடைபெறுகின்றது. அதுவே அவுஸ்திரேலியத் தேர்தல் பிரச்சாரங்களைக் கடினமாக்குகின்றது. வாக்காளர்களையும் குழப்புகின்றது.

பனங்காட்டான்

# தவறை ஒப்புக்கொண்டால் தண்டனையிலிருந்து விதிவிலக்கா?



**சாதாரண ஒரு குடிமகன் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டால் சட்டமும் நீதியும் என்ன செய்யும்? ஒரு நாட்டையே அதலபாதாளத்துக்கு தள்ளிய அதன் தலைவர் தமது தவறை ஒப்புக் கொண்டால் ஆகக்குறைந்த தண்டனையாவது வழங்க வேண்டாமா? போராடும் மக்கள் அதனையே கேட்கின்றனர் - கோட்டா கோ ஹோம்!**

கோட்டாபய வீட்டுக்குப் போ என்ற கோஷத்துடன், மிரிகானவிலுள்ள அவரது தனிப்பட்ட இல்லத்துக்கு முன்னால் மார்ச் மாதம் 31ம் திகதி தன்னெழுச்சி முனைப்புப் பெற்ற மக்கள் போராட்டம் மூன்று வாரங் களைத் தாண்டியுள்ளது.

நாட்டின் கஜானாவை காலி செய்த ராஜபக்ஷக்களை கூண்டோடு வீட்டுக்கு அனுப்புவோம் என்ற முழக்கத்துடன் காலிமுகத்திடலில் ஆரம்பித்த மாபெரும் பேரெழுச்சியும் இரண்டு வாரங்களைத் தாண்டிற்று.

இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவாக ஆங்காங்கே வீதி மறிப்புகள், சுலோக எழுச்சிகள், ஊர்வலங்கள் இடம்பெறுகின்றன. அரசியல் கட்சிகள் எதனதும் தலைமையின்றி, அரசியல்வாதிகள் எவரதும் பங்கேற்பின்றி இலங்கை வரலாற்றில் இடம்பெறும் ஆட்சிக்கு எதிரான முதலாவது தொடர் போராட்டமென்றே இதனைக் கூற வேண்டும்.

இவைகளைப் பார்க்கும்போது கோட்டாபய அவரது கும்பலும் ஆட்சிபீடத்திலிருந்து துரத்தப்படும் காலம் துாரத்தில் இல்லை என்பது போலவே தோற்றம் தருகிறது. ஆனால், அதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் சாதகமாகக் காணப்படவில்லை என்பதே யதார்த்தம்.

மக்களின் தன்னெழுச்சியைத் தடுக்காது, அவர்களுக்கு அதற்கான ஜனநாயக இடைவெளி உரிமையுண்டு என்று கூறியவாறு, அதனை அவர்கள் தொடர தடை விதிக்காதது போல காட்டிக் கொண்டு, மறுதரப்பில் என்ன நடைபெறுகிறது? கால இழுத்தடிப்பு போராட்டத்தின் வேகத்தை இழக்கச் செய்யும் என்ற சூத்திரத்தை கோட்டாபய பயன்படுத்துவது வெளிப்படையாகத் தெரிகிறது. இதனை அவரது பற்றாளர்கள் கோதபாய கோட்பாடு என்கின்றனர்.

அதேசமயம் போராட்டக்காரரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது போன்ற நாடகத்தை கோட்டாபயவும் மகிந்தவும் - தனித்தும் இணைந்தும் அரங்கேற்றுவதைக் காணலாம். அடுக்கடுக்காக இடம்பெறும் சில நிகழ்வுகளை கூர்ந்து நோக்கின் இது புலப்படும்.

நிறைவேற்று அதிகாரத்தை மீளாய்வு செய்ய (ரத்துச் செய்யவல்ல) ஜனாதிபதி கோட்டாபய தயார் என்று ஒரு தகவல் பரபரப்பாக வந்தது.

அதனையொட்டிய முக்கிய நடவடிக்கைகளை பிரதமர் என்ற வகையில் மஹிந்த மேற்கொள்வதாக இன்னொரு தகவல் வந்தது.

கோட்டாபயவினால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட இருபதாவது அரசியல் திருத்தத்தில் சிலவற்றை நீக்கி, நல்லாட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட இருபதாவது திருத்தம், அதற்கு முன்னையை பத்தொன்பதாவது திருத்தம் போன்றவற்றின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இருபத்தோராவது அரசி யல் திருத்தம் வருமென்று மற்றொரு தகவல் வந்தது.

அடுத்து, நாடாளுமன்றத்துக்கு கூடிய அதிகாரங்களைக் கொடுப்பதுடன் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் மாற்றங்களைக் கொண்டு வரவிருப்பதாக மேலதிக தகவல் வெளியிடப்பட்டது.

இந்தத் தகவல்கள் அனைத்தும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இரு சகோதரர்களுடன் சம்பந்தப்பட்ட தரப்புகளால் அவ்வப்போது பரிமாறப்பட்டன. மக்கள் குரலுக்கு ராஜபக்ஷக்கள் செவி சாய்ப்பது போன்றதாக இவைகள் அமைந்தன.

இதற்கிடையில் முன்னைய அமைச்சரவைக்குப் பதிலாக புதிய - சிறிய அமைச்சரவையை கோட்டாபய நியமித்தார். இதில் ராஜபக்ஷ குடும்பத்தினர் சேர்க்கப்படவில்லை. ராஜாங்க அமைச்சர்களாக பணியாற்றிய இளையவர்கள் பலருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

போராட்ட அச்சம் காரணமாக பழைய - முதிய அமைச்சர்கள் சிலர் தாமாகவே ஒதுங்கியதாக செய்திகள் வந்தன. அதேசமயம் அமைச்சர் பதவியில் ஆசை கொண்ட சிலருக்கு இடம் கிடைக்கவில்லை (காலக்கிரமத்தில் இவர்களை எவ்வாறு அமைச்சராக்குவது என்பது கோதபாயவுக்குத் தெரியும்).

பொதுமக்களின் போராட்ட கோரிக்கை கோட்டாபயவையும் ராஜபக்ஷக்களையும் வீட்டுக்கு அனுப்புவது என்பதே. ஆனால் கோட்டாபய அதனை கவனிக்காதவர் போன்று தம் விருப்பப்படி அமைச்சரவையை மாற்றிய மைத்தார். புதிய அமைச்சரவை விடயத்தில் தாம் சம்பந்தப்படாதவர்போல, அல்லது தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு நடைபெறாதது போல காட்டிக் கொள்ள விரும்பிய மஹிந்த, புதிய அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்வைத் தவிர்த்துக் கொண்டார்.


இவைகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, மஹிந்தவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ, தமது சித்தப்பாவான கோட்டாபயவின் செயற்பாடுகளை விமர்சிப்பவராகவும், போராட்டக்காரர்களின் குரலுக்கு சாதகமாகவும் கரிசனையை வெளிப்படுத்தி வந்தார். முக்கியமானது, ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற இவரது கருத்து.

அதேசமயம், அரசமைப்பு மாற்றங்கள் விடயத்தில் மIந்தவின் செயற்பாடுகளையும் கருத்துகளையும் கோட்டாபய விரும்பவில்லையென்றும், இருவருக்கு மிடையில் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட சில ஊடகங்களுக்கு ஒரு தகவல் கசிய விடப்பட்டது. இதனைக்கூட திட்டமிட்ட ஒரு நாடகம் எனச் சிலர் சொல்கின்றனர். இந்த நாடகத்தினுாடாக, மஹிந்த எடுக்கும் பிந்திய நடவடிக்கைகளுக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தி, அதனுாடாக கோட்டாபயவின் ஆட்சியை தக்க வைப்பதே நோக்கம். இதன் வழியாக காலக்கிரமத்தில் நாமலை ஆட்சியில் இணைத்து அவருக்கான எதிர்காலத்தை நிச்சயிப்பதில் மஹிந்த அக்கறையோடு இருப்பதாக கூறப்படுகிறது.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் இரண்டு முக்கியமான - எதிரும் புதிருமான விடயங்கள் கொழும்பில் இடம்பெற்றிருக்கின்றன.

1. அரசியலமைப்பின் புதிய திருத்தத்துக்கான முன்மொழிவை சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்துகம சபாநாயகரிடம் கையளித்துள்ளார். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து பாராளுமன்ற அதிகார முறையை உருவாக்கும் யோசனைக்கான பிரேரணை இது.

2. ஜனாதிபதி கோட்டாபயவின் கீழ் பிரதமராகவிருக் கும் மகிந்த தலைமையில் தொடர்ந்தும் ஆட்சி நடத்துவ தற்கு அரச தரப்பு எம்.பிக்கள் பூரண ஆதரவு வழங்கும் பிரேரணை அரசாங்க நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியுள்ளது. (இடைக்கால அரசு அமைப்பைக் கேட்கும் அரச தரப்பு சகாக்கள் சிலரின் குரலை மடக்க எடுக்கப்பட்ட முயற்சி).






ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்துள்ள பிரேரணை எப்போது விவாதிக்கப்படும், பிரேரணை நிறைவேற அறுதிப் பெரும்பான்மை கிடைக்குமா, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க இது வழிவகுக்குமா என்பவை கேள்விக்குறி. இதுபோன்ற பிரேரணை ஒன்றை மகிந்த ராஜபக்ச சமர்ப்பிக்கப் போவதாக செய்திகள் வந்த நிலையில், அதனைப் பரீட்சித்துப் பார்க்க சஜித் அணி மேற்கொள்ளும் அமில சோதனையாக சிலர் இதனைப் பார்க்கின்றனர்.

மஹிந்த தலைமையிலான நாடாளுமன்ற அதிகாரத்தைத் தொடர ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கும் பிரேரணை கோதபாயவின் கரத்தை பலப்படுத்துமா அல்லது மகிந்தவின் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்துமா என்பதுகூட பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியவை.

இந்தச் செயற்பாடுகளுக்கு அப்பால் புதிய அமைச்சரவையின் முன்னால் கோட்டாபய ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துகள் முக்கிய கவனத்துக்குரியவை.

விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தொழில்வாய்ப்பின்மை, பொருளாதார நெருக்கடி போன்றவைகளுக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள கோதபாய, ரசாயன உரத்தடை போன்றவைகளை தவறு என்றும் ஒப்புக் கொண்டுள்ளார்.

இருபது ஆண்டுகள் முப்படைகளின் அதிகாரியாக இருந்து ஆற்றிய சேவைக்காக தமக்குத் தாமே புகழாரம் சூட்டியுள்ள இவர், நாட்டின் நிறைவேற்று அதிகார தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ஆட்சிக்காலத் தவறினை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு மக்கள் பேரெழுச்சி வழிவகுத்தது. உண்மையைச் சொல்வதானால், மனவிருப்பம் இன்றியே இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை இவர் அளிக்க நேர்ந்திருக்கும்.


இவ்விடத்தில் எழுகின்ற ஒரு கேள்வி முக்கியமானது. சாதாரண ஒரு குடிமகன், நீதிமன்ற வழக்கொன்றில் தமது தவறை ஒப்புக்கொண்டால் சட்டமும் நீதியும் என்ன செய்யும்? நீதி என்பது நீதியாக வழங்கப்படுமானால் ஆகக்குறைந்த தண்டனையாவது வழங்கப்படும். தவறினை ஒப்புக்கொண்டு விட்டால் தண்டனையிலிருந்து தப்பிவிட முடியாது.


முழு நாட்டையும் அதலபாதாளத்துக்குள் தள்ளி நாடு தழுவிய மக்கள் போராட்டத்துக்குக் காரணமான கோட்டாபய வெறுமனே ‘தப்பு’ என்று கூறியதால் தப்பிச்செல்ல விட முடியுமா?


ஜே.வி.பி. எம்.பி. அனுரகுமார நாடாளுமன்றில் உரையாற்றும்போது “சிரித்துக் கொண்டே படுகொலை செய்ய கோட்டாபயவால் மட்டுமே முடியும்” என்று குறிப்பிட்டதை, ‘படுகொலை புரிந்தவாறே சிரிக்கவும் கோதபாயவால் மட்டும்தான் முடியும்’ (உதாரணம்: முள்ளிவாய்க்கால் படுகொலைகள்) என்ற உண்மையின் வழியாக, தமது தவறை ஒப்புக்கொண்ட அவரை வீட்டுக்கு அனுப்புவதே ஆகக்குறைந்த தண்டனையாக அமைய வேண்டும் என்பதே போராடும் மக்களின் ஏகோபித்த குரல் - கோட்டா கோ ஹோம்!

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1)
2)
3)




38. 
காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?


1) 2) 3)

39. 3 * 4 # 3 = 15 இங்கு * # ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 

1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37.** 1 **38.** 2 **39.** 1 **40.** 2

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1

**25.04.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**25.04.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## இறையிரக்க ஞாயிறான நேற்று கல்லடியில் விசேட திருப்பலி!

மட்டக்களப்பு, ஏப். 25

கத்தோலிக்கர்களின் சிறப்பு விழாக்களின் ஒன்றான இறை இரக்க பெருவிழாவான நேற்று கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

2000 ஆண்டுகளுக்குமுன் புனித பட்டம் பெற்ற துறவற சபை துறவி பவுஸ்தீனாவுக்கு 1930ஆம் ஆண்டு 14 முறை இருதய ஆண்டவர் காட்சி அளித்தமை நிரூபிக்கப்பட்டமையால் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் நோயல் ஜோன் போல் உயிர்த்த காலத்தின் இரண்டாவது ஞாயிறு தினத்தை இறையிரக்க ஞாயிறு தினமாக பிரகடனப்படுத்தினார்.

இந்த நாளை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திரு இருதய நாதர் திருச்சுரூபம் மக்கள் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டு ஆசி வழங்கலுடன், விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருட்தந்தை ரோஷன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற விசேட திருப்பலியில் பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார், உதவி பங்கு தந்தை அருட்பணி ஜேம்ஸ் அடிகளார் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். (ஐ)

# தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வின்றி நாட்டின் பிரச்னைகள் தீர்ந்துவிடாது

### அம்பாறையில் கருணாகரம் எம். பி.

அம்பாறை, ஏப். 25

**“கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதிவியில் இருந்து விலகுவது அல்லது இந்த அரசாங்கம் போவதால் மாத்திரம் இந்த நாட்டின் பிரச்னைகள் தீர்ந்து விடப் போவதில்லை. தமிழ் மக்களுக்கு நியாயமான - நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைக்காவிட்டால் இந்த நாடு மீண்டும் மீண்டும் அழிவுப்பாதைக்கே செல்லும்”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

அம்பாறை - காரைதீவில் விளையாட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் எமது உரிமைகள் பறிக்கப்பட்டதோடு 56ஆம் அண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து நாங்கள் உரிமைக்காகப் போராடுகின்றோம்.

இன்று காலிமுகத்திடலிலே பெரும்பாலான சிங்கள இளைஞர், யுவதிகள் தங்களது அன்றாட, அத்தியாவசியத் தேவைகளுக்காக ராஜபக்ஷ அரசாங்கம் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று போராடுகின்றார்கள். ஆனால், நாங்கள் எமது உரிமைகளுக்காகப் போராடி வந்தவர்கள்.

ராஜபக்ஷ சகோதரர்கள் தாங்களாகவே இந்த ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. சர்வ தேசத்தின் உதவியை நாடினார்கள். குறிப்பாக இந்தியாவின் உதவியை நாடினார்கள். இந்திய, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இந்த நாட்டிலே தனி ஈழம் அமைவது வேண்டத்தகாத காரணத்தினால் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு உதவி செய்தார்கள்.

அந்தநேரம் அவர்கள் சர்வ தேசத்திற்கு ஒரு உத்தரவாதத்தைக் கொடுத்தார்கள் 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை என்ற 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேலாகச் சென்று அதிகாரப் பரவலாக்கலைக் கொடுப்போம் என்ற உத்தரவாதம் கொடுத்து இந்த ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள்.

இவையெல்லாம் 140,000 பேருக்கு மேற்பட்ட தமிழர்களை முள்ளிவாய்க்காலில் கொன்றொழித்த பாவம் மட்டுமல்லாது எத்தனையோ அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்களைக் கொன்று குவித்த பாவம் இன்று அவர்களை நின்று ஆட்டுகின்றது. இன்று ஆட்சியை மாற்ற வேண்டும் என்று கூறுகின்றீர்கள், ராஜபக்ஷ சகோதரர்கள் விட்டுக்குப் போக வேண்டும் என்ற கூறுகின்றீர்கள் ஆனால், அதன் பின்னர் வரக்கூடிய தலைவர் யார் என்பதை போராட்டக் களத்தில் நிற்பவர்கள் கூறவில்லை.

இன்று இந்தப் போராட்டங்கள் ஏற்பட்டதற்கான காரணம், இலங்கையின் பொருளாதார நிலை அதலபாதாளத்துக்கு சென்றிருக்கின்றது. இந்த நிலைமைக்குச் செல்வதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்பதை இன்னும் புரியாமல் இருக்கின்றார்கள். இந்த நாட்டில் போருக்காக எத்தனை நூறு கோடி டொலர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இன்று இந்தியா இல்லாது விட்டால் தமிழ் மக்கள் மாத்திரமல்ல இந்த ஒட்டுமொத்த நாடே மிகவும் மோசமான வறுமை நிலைக்குச் சென்றிருக்கும். இன்று இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் உதவி செய்கின்றது. ஆனால், சிலர் கூறுகின்றார்கள் ராஜபக்ஷ சகோதரர்களைக் காப்பாற்றுவதற்காக இந்தியா உதவி செய்கின்து என்று. நான் இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தமிழ் மக்களைக் கொன்றுகுவித்த ராஜபக்ஷ சகோதர்களை நீங்கள் காப்பாற்றுகின்றீர்களா என்று கேட்டதற்கு அவர்கள் என்னிடம் சொன்னார்கள் நாங்கள் எரிபொருள், அரிசி கொடுப்பது ராஜபக்ஷ சகோதரர்களுக்கு அல்ல எமது பக்கத்து தேசம் பட்டினியால் வாடக்கூடாது என்பதற்காக அந்த மக்களுக் காகவே உதவி செய்கின்றோம் என்றார்கள்.

தமிழ் மக்களுக்கான ஒரு நியாயமான, நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வை இந்த நாட்டின் அரசாங்கங்கள் முன்வைக்கவிட்டால் இந்த நாடு மீண்டும் மீண்டும் அழிவுப்பாதைக்குச் செல்லும் என்பதோடு எங்கள் மத்தியிலும் ஒற்றுமை முக்கியம் என்பதையும் கூறிக் கொள்கின்றேன் - என்றார். (ஐ)

## நோன்பு பெருநாளை முன்னிட்டு ஆடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன

காத்தான்குடி, ஏப். 25

நோன்பு பெருநாளை முன்னிட்டு காத்தான்குடியில் ஏழைகளுக்கு ஆடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பிஸ்மி இளைஞர் கழகத்தில் அங்கம் வகிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள், அவர்களின் குடும்பங்கள் நலன் விரும்பிகளை அடிப்படையாக கொண்டு அவர்களிடம் இருக்க கூடிய நல்ல நிலையிலுள்ள பாவித்த ஆடைகள் மற்றும் புதிய ஆடைகளைஅன்பளிப்பாக தரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆடைகள் காத்தான்குடி பிரதேச செயலகம், சில பள்ளிவாசல்கள் ஊடாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட 200இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆடைகள் அல்மனார் வளாகத்தில் வைத்து நேற்று ஆடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நோன்பு பெருநாளை முன்னிட்டு இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதலில் இறந்தோர் நினைவாக இரத்த தான முகாம்!

மட்டக்களப்பு, ஏப். 25

2019ஆம் ஆண்டு இடம் பெற்ற ஈஸ்டர் குண்டு தாக்குதலில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் வகையில் மட்டக்களப்பில் நேற்று இரத்த தான முகாம் நடைபெற்றது.

‘உதிரம் தனை உவந்தளித்து உன்னத உயிரைக் காப்போம் ’எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

ஈஸ்டர் குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவாக நடைபெற்ற இந்த இரத்த தான முகாம் மட்டக்களப்பு இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை எலக்ஸ் ரொபட் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.



மட்டக்களப்பு போதனா மருத்துவமனை இரத்த வங்கி பிரிவு மருத்துவர் டி. தவனேசன் வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் குருதியை சேகரித்தனர்.

இதில், பல இளைஞர் யுவதிகள் ஆர்வத்துடன் பங்கேற்று குருதி தானம் செய்தனர். பங்கேற்றவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## இரத்தம் உறிஞ்சும் அட்டைபோல அரசும் மக்களை உறிஞ்சுகிறது!

### சாணக்கியன் எம். பி. சாடல்

மட்டக்களப்பு, ஏப். 25

அட்டைகள் எவ்வாறு மனிதனிலிருந்து இரத்தத்தை உறிஞ்சுமோ அதுபோன்று ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கமும் நாட்டு மக்களை உறிஞ்சும் செயல்பாட்டை முன்னெடுத்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். மட்டக்களப்பு பாலமீன்மடு லைட்ஹவுஸ் இளைஞர் கழகத் தின் 26வது நிறைவையொட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியின் பரிசு வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் கூறிய அவர், கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் நாட்டில் அட்டைகள் எவ்வாறு இரத்தத்தை உறிஞ்சி எடுக்குமோ அதே போன்று இந்த நாட்டு மக்களின் நிதியை களவெடுத்து, நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை விற்பனை செய்து, இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான அந்நிய செலாவணியை கொண்டு நாடுகளின் கடனை செலுத்துவதாகக்கூறி தனது குடும்பத்தின் கடன்களை அடைக்கும் செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்த நாட்டில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வரும்போது கையிருப்பாக 600 கோடி அமெரிக்க டொலர் இருந்துள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி வரப்போகின்றது. பொருட்களுக்கான தட்டுப்பாடு வரப்போகின்றது என்று தெரிந்தும் இந்த அந்நிய செலவாணியை பயன்படுத்தி அந்த கடனை அடைப்பதற்கான காரணம் அவரின் குடும்பத்தின் வேண்டப்பட்டவருக்கே. இந்த நிதியை வழங்கியதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவருகின்றது.

- என்றார். (ஐ)

# ரஷ்யா, உக்ரைன் போரை நிறுத்த ஐ. நா. பொதுச் செயலர் களத்தில்!

## நாளை ரஷ்ய தலைவரை சந்திப்பார்

நியூயோர்க், ஏப். 25

ஐக்கிய நாடுகளின் ( ஐ. நா.) பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் அடுத்த வாரம் ரஷ்யா மற்றும் உக்ரைன் ஜனாதிபதிகளை அவரவர் நாட்டில் சந்தித்து போர் நிறுத்தம் குறித்துப் பேசவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினையும், வெள்ளிக்கிழமை உக்ரைன் ஜனாதிபதி வொலடிமிர் ஜெலன்ஸ்கியையும் அவர் சந்திப்பார். இந்த சந்திப்பை ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.



முன்னதாக, இந்த சந்திப்புகளை சாத்தியமாக்க வேண்டும் என்று ரஷ்யா, உக்ரைனுக்கு ஐ. நா. சார்பில் கடிதம் எழுதப்பட்டது.

உக்ரைன்மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி தாக்குதலைத் தொடங்கியது. இந்தத் தாக்குதலால் ஐ. நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினரான அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, சீனா நாடுகள் மத்தியில் விரிசல் ஏற்பட்டுள்ளது. காரணம், ரஷ்ய தாக்குதல் மேற்கத்தைய அத்துமீறலுக்கு எதிரானது என்று கூறி சீனா ஒதுங்கிவிட்டது.

பாதுகாப்பு சபையிலுள்ள மற்ற மூன்று நாடுகளும் ரஷ்யாவை எதிர்த்து வருகின்றன. இவ்வாறாக பாதுகாப்பு சபையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், ரஷ்யா, உக்ரைன் இடையேயான அமைதிப் பேச்சசை தொடங்கிவைப்பதற்காகவே இந்தப் பயணத்தை பொதுச் செயலாளர் மேற்கொள்வதாக ஐ.நா. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ஐ)



# ஜப்பானில் 26 பேருடன் படகு கடலில் மூழ்கியது!

## நால்வர் உயிருடன் மீட்பு

ரோக்கியோ, ஏப். 25

ஜப்பானின் வடக்கு பகுதியில் ஹொக்கைடோ தீவின் துறைமுகத்தில் இருந்து 26 சுற்றுலா பயணிகளுடன் பட கொன்று கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளது.

நேற்றுமுன்தினம் காணமல் போன இந்தப் படகையும் அதில் இருந்தவர்களையும் தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காணாமல் போனவர்களில் நால்வரை ஹெலிகொப்டரில் சென்ற மீட்புக் குழுவினர் வடக்கு ஜப்பான் ஷிரெட்டோகோ தீபகற்பத்தில் கண்டறிந்துள்ளனர்.

மிகக் கடும் குளிர் காலநிலை நிலவும் இந்தப் பகுதியில் கண்டறியப்பட்ட நால்வரின் நிலைமைகள் குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை.

நான்கு பேரும் ஷிரெட்டோகோ தீபகற்பத்தின் முனைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் உயிருடன் மீட்கப்பட்டார்களா? என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என ஜப்பானிய கடலோர காவல்படை கூறியது.

இதனிடையே, அவர்கள் சுயநினைவின்றி இருக்கின்றனர் என்று ஜப்பானிய அரச தொலைக்காட்சியான என். எச்.கே. தெரிவித்துள்ளது. மீட்கப்பட்டவர்களில் ஒருவர் ஹெலிகொப்டரில் ஏற்றிவரப்பட்டு அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பப்படும் காட்சிகளை அந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.

24 பயணிகள் மற்றும் இரண்டு பணியாளர்களுடன் சென்ற படகு நேற்று சனிக்கிழமை அபாய சமிக்ஞையை அனுப்பிய பின்னர் காணாமல் போனது. அந்தப் படகு நீரில் மூழ்கியதாகக் கருதப்படுகிறது.

காணாமல்போன படகில் இருந்தவர்களைக் கண்டறியும் பணியில் ஆறு ரோந்துப் படகுகள், பல ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன. இரவிரவாக தேடுதல் பணி தொடர்ந்ததாக ஜப்பானிய கடலோர காவல் படையினர் தெரிவித்தனர்.

படகு மூழ்கிய வடக்கு ஜப்பான் ஷிரெட்டோகோ தீபகற்பத்தில் மைனஸ் டிகிரி குளிர் காலநிலை நிலவி வருவதால் நீரில் மூழ்கியவர்கள் உயிர் பிழைப்பது கடினம் எனக் கருதப்படுகிறது. (ஐ)



# ரஷ்யாவின் 21,200 வீரர்கள் 176 விமானங்கள் அழிப்பு!

கீவ், ஏப். 25

உக்ரைனின் பெரிய நகரங்களில் ஒன்றும் முக்கியத்துவம் நிறைந்ததுமான மரியூபோலை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. இந்நிலையில், இந்த நகரில் ரஷ்யாவுக்கு தாங்கள் ஏற்படுத்திய இழப்பை உக்ரைன் அறிவித்துள்ளது.

இதன்படி, 21,200 ரஷ்ய படைகளை தாம் கொன்றனர் என்றும், 2,162 ஆயுத வாகனங்கள், 176 விமானங்கள், 153 ஹெலிகொப்டர்கள், 838 டாங்கிகள் மற்றும் 1,523 பிற வாகனங்களை அழித்துள்ளதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

மேலும், சிறு விமானங்கள், குறுகிய தூர பொலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் பல படகுகளையும் ரஷ்யா தங்களின் இராணுவத்திடம் இழந்துள்ளது என்றுகூறி உக்ரைன் கூறியுள்ளது.

உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பெரிதாக வெளியில் தெரிவதில்லை. ரஷ்ய தரப்பு தங்களின் இழப்புகள் பற்றி பேசவில்லை. சில தினங்கள் முன் ரஷ்யாவின் மாஸ்க்வா கப்பலை உக்ரைன் வீழ்த்தியது மட்டுமே பெரிய சம்பவமாக இருந்தது. இதனிடையே, போரில் ரஷ்யாவிற்கு ஏற்பட்ட இழப்பு கள் பற்றிய புள்ளிவிவரங்களை உக்ரைனின் வெளிவிவகா அமைச்சு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மரவள்ளிக் கிழங்கினுள்ளே கொக்கைன் போதைபொருள்!

பாரிஸ், ஏப். 25

பாரிஸ் புறநகரங்களில் பிரபல பல்பொருள் அங்காடிகளில் மரவள்ளிக் கிழங்கு வாங்கியோர் அவற்றின் உள்ளே வெண்ணிறப் பவுடர் போன்ற பொருள் சிறு பொதிகளில் இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அவர்கள், இது குறித்து நிர்வாகங்களுக்கு அறிவித்துள்ளனர். உடனடியாகப் பொலிஸார் அழைக்கப்பட்டனர். கிழங்குகள் கைப்பற்றப்பட்டு மோப்ப நாய்களின் உதவியோடு சோதனை செய்யப்பட்டன. இதன்போது கிலோ கணக்கிலான கொக்கைன் போதைவஸ்து மீட்கப்பட்டிருக்கிறது.

13 மரவள்ளிக் கிழங்குகளின் உள்ளே இருந்து சுமார் நான்கு கிலோ கொக்கைன் பவுடர் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் சந்தைப் பெறுமதி மூன்று லட்சம் யூரோக்கள் என மதிப்பிடப்படுகிறது.

பல் பொருள் அங்காடி ஒன்றின் ஊழியர் கிழங்குகளில் போதைப் பொருள் இருப்பதை தெரிந்து கொண்டு அவற்றில் சிலவற்றை எடுத்து ஒளித்து வைப்பதற்கு முற்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

மரக்கறி, பழ வகைகளைச் சந்தைகளுக்கு விநியோகிக்கின்ற பெரு நிறுவனத்தின் ஊடாகவே மரவள்ளிக் கிழங்குகள் ஆபிரிக்கா மற்றும் மேற்கு இந்திய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. மரவள்ளிக் கிழங்குகளில் கொக்கைன் மீட்கப்பட்டமை மிகப் பெரிய போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிப்பதுடன், இது குறித்து விசாரணைகளையும் முடுக்கி விட்டுள்ளனர். (ஐ)

# பத்தில் எட்டு பேருக்கு இங்கிலாந்தில் தொற்று

லண்டன், ஏப். 25

2020ஆம் ஆண்டு கொரோனா தொற்று பரவியத்திலிருந்து இங்கிலாந்தில் 10பேரில் எண்மர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அந்த நாட்டின் தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 2 கோடியே 20 இலட்சம் தொற்றாளர்கள் மற்றும் ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 980 க்கும் மேற்பட்ட உயிரிழப் புகளும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த ஜனவரி மாதத்தின் பின்னர் ஒமைக்ரோன், பிறழ்வும் அதன் துணை பிறழ்வான BA.2 உம் இங்கிலாந்தில் பரவுகின்றன. இவற்றால் உயிரிழப்பு குறைவாகவுள்ளபோதிலும் மருத்துவமனைக்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனிடையே கொரோனா கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையே இங்கிலாந்தில் தொற்று அதிகரிக்கக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ஐ)

# எண்ணெய் நிலையத்தில் வெடிவிபத்து; நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

## நைஜீரியாவில் பெரும் சோகம்

நைஜர், ஏப். 25

நைஜீரியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் நூறுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்று அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நைஜீரியாவில் உள்ள ரிவா□ஸ் என்ற இடத்தில் சட்டவிரோதமாக செயல்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலேயே இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்ற இந்த விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தவல் வெளியிட்டன.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை. விபத்தில் காயமடைந்தவர்கள், சேதங்கள் ஆகியவை குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




தலைமறைவாகியுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய உரிமையாளரையும் அவர்கள் தேடி வருகின்றனர் என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ஐ)

# சுருண்டது பெங்களூர் ஹைதராபாத் வெற்றி!



மும்பை, ஏப். 25

பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். 15ஆவது தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நேற்று முன்தினம் 36ஆவது போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும், சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில், நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் பந்துவீச்சை தெரிவு செய்தார். இதன்படி பெங்களூர் அணிக்கு அனுஜ் ராவத், பப் டூ பிளசிஸ் இணை தொடக்கம் கொடுத்தது.

இந்த ஐ. பி. எல். தொடரிலேயே மிகமோசமான தொடக்கமாக இது அமைந்தது. மார்கோ ஜோன்சன் வீசிய 2ஆவது ஓவரின் 2ஆவது பந்து பிளசிஸை கடந்து சென்று விக்கெட்டை தாக்க 5 ஓட்டங்களிலேயே அவர் வெளியேறினார். அடுத்து வந்த விராட் கோலியும், களத்திலிருந்த அனுஜ் ராவத்தும், தொடர்ந்து ஆட்டமிழக்க அந்த ஓவரில் மட்டும் 3 விக்கெட்களை பறிகொடுத்தது பெங்களூர். இந்த தொடரில் மட்டம் தொடர்ந்து இரண்டாவது தடவையாக டக் அவுட் ஆனார் விராட் கோலி.

ஆனால், விக்கெட்களை தாரைவார்க்கும் பெங்களூரின் தாராள மனப்பான்மை அத்தோடு நிற்கவில்லை. 4ஆவது ஓவரில் மக்ஸ்வெல் 12 ஓட்டங்களில் வெளியேற, 9ஆவது ஓவரில் சுயாஷ் பிரபுதேசாய் 15 ஓட்டங்களிலும், தினேஷ் கார்த்திக் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் பெவிலியன் திரும்பினர்.

அடுத்து வந்த வீரர்கள் அணிக்கு நம்பிக்கை கொடுக்காமல் வருவதும் போவதுமாகவே இருந்தனர். ஷபாஸ் அஹமட் 7 ஓட்டங்களும், ஹர்ஷல் பட்டேல் 4 ஓட்டங்களும் என ஒற்றை வரிசை ஓட்டங்களுடன் வெளியேறி பெங்களூர் அணியின் ரசிகர்களை விரக்தியடையச் செய்தனர்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்களையும் இழந்த பெங்களூர் 68 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. அந்த அணியில் 3 வீரர்கள் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

ஹைதராபாத் அணியின் பந்துவீச்சில் மார்கோ ஜோன்சன், நடராஜன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், ஜெகதீஷ் 2 விக்கெட்களையும், உமர் மாலிக் புவனேஷ்குமார் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

69 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு கேன் வில்லியம்சன், அபிஷேக் ஷர்மா இணை தொடக்கம் கொடுத்தது. சிறப்பான தொடக்கத்தை கொடுத்த இந்த இணையை 8ஆவது ஓவரில் ஹர்ஷ் பட்டேல் பிரித்தார். அவர் வீசிய பந்தில் ஆட்டமிழந்து 47 ஓட்டங்களுடன் களத்திலிருந்து வெளியேறினார் அபிஷேக் ஷர்மா.

இதையடுத்து, கேன் வில்லியம்சனும், ராகுல் திரிபாதியும் இணைந்து 8 ஓவர்களிலேயே இலக்கை எட்டி அணிக்கு 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் பெங்களூருவை தோற்கடித்தனர்.



# சொதப்பியது கொல்கத்தா் குஜராத் அசாத்திய வெற்றி!

மும்பை, ஏப். 25

கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றிபெற்றது.

இந்தியாவில் நடக்கும் ஐ. பி. எல் தொடரில் நேற்று முன்தினம் நடந்த 35ஆவது போட்டியில் குஜராத் அணியும், கொல்கத்தாவும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி தொடக்க ஆட்டக்காரர்களான ஷப்மன் கில் - சஹா குஜராத் அணியின் இனிங்ஸை தொடங்கி வைத்தனர். 7 ஓட்டங்களில் கில் வெளியேறினார். அடுத்ததாக குஜராத் அணியின் தலைவர் ஹார்திக் பாண்ட்யா, சஹா இணைந்து சிறப்பான ஆட்டத்தைக் கொடுத்தனர்.

குஜராத் அணி 83 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது உமேஷ் யாதவ் பந்து வீச்சில் சஹா 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்த வந்த டேவிட் மில்லர் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதிரடியாக விளையாடிய பாண்ட்யா அரைச் சதம் அடித்தார். 69 ஓட்டங்களை அவர் எடுத்திருந்த போது சௌதியின்பந்து வீச்சில் வெளியேறினார்.

அடுத்த வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினார்கள். திவாட்டியா 17, ரஷித் கான் 0, அபினவ் மனோகர் 2, பெர்குசன் 0, டயல் 0 என அடுத்தடுத்து வெளியேற குஜராத் அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 156 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து, 157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தாவுக்கு சுனில் நரேன், சாம் பில்லிங்ஸ் இணை தொடக்கம் கொடுத்தது. முதல் ஓவரிலேயே சாம் பில்லிங்ஸ் 4 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்த ஓவரில் சுனில் நரேன் 5 ஓவர்களில் வெளியேற, ராணாவும் நிலைக்கவில்லை. ஷ்ரேயாஸ் ஐயர் பெரிய அளவில் சோபிக்காமல் 12 ஓட்டங்களில் நடையைக் கட்டினார்.

நிலைத்து ஆடிய ரிங்கு சிங் 35 ஓட்டங்களிலும், வெங்கடேஷ் ஐயர் 17 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். ரஸல் மட்டும் 48 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மற்ற வீரர்கள் பெரிய அளவில் ஓட்டங்களை சேர்க்காததால், கொல்கத்தா தோல்வியை தழுவியது. 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் வெற்றியை பதிவு செய்தது.

குஜராத் அணி தரப்பில் ஷமி, யாஷ் டயல், ரஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், லோகி பெர்குஷன், அல்சாரி ஜோசப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# ரிஷப் பந்துக்கு அபராதம் விதிப்பு

மும்பை, ஏப். 25

முறை தவறிய பந்துவீச்சு தொடர்பான ஐ. பி. எல். விதிகளை மீறியமைக்காக டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவர் ரிஷப் பந்த், சர்துல் தாகூருக்கு அபராதமும், உதவி பயிற்றுநர் பிரவீன் ஆம்ரேவுக்கு ஓர் ஆட்டம் தடையும் விதிக்கப்பட்டது.

ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டாம் நிலை தவறு புரிந்தமைக்காக ரிஷப் பந்துக்கு போட்டியின் 100 சதவீத ஊதியமும், சர்துல் தாகூருக்கு 50 சதவீத ஊதியமும் அபராதமாக விதிக்கப்பட்டன.

இதே போல் விதிமீறலுக்காக டில்லி அணியின் உதவி பயிற்றுநர் பிரவீன் ஆம்ரேவுக்கு போட்டியின் 100 சதவீத ஊதியம் அபராதத்துடன், ஒரு போட்டி தடையும் விதிக்கப்பட்டது.

# இங்கிலாந்தின் பயிற்றுநர் வாய்ப்பை மறுத்த மஹேல!

கொழும்பு, ஏப். 25

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுநருக்கான அழைப்பை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன நிராகரித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்றுநராக கிறிஸ் சில்வர்வூட் நீக்கப்பட்டமையைத் தொடர்ந்து இங்கிலாந்து அணியின் பயிற்றுநர் பதவி வெற்றிடமாகியுள்ளது.

மஹேல ஜெயவர்த்தன இதற்கு முன்னர் இங்கிலாந்தின் துடுப்பாட்ட ஆலோசகராக இருந்துள்ளார்.

தவிர, ஐ. பி. எல். அணியான மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பல ஆண்டுகளாக பயிற்றுநராக இருந்து வரும் மஹேல, தேசிய அணி ஒன்றின் பயிற்றுநராகப் பொறுப்பேற்கும் எண்ணம் இல்லை என பலமுறை கூறி வந்தார்.



அண்மையில் இங்கிலாந்து அணியின் முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ரொபர்ட் கீ, இங்கிலாந்து அணியின் பயிற்றுநராக மஹேலவை பொறுப்பேற்குமாறு கோரியுள்ளார் என்று சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.எவ்வாறாயினும், தனது குடும்ப உறுப்பினர்களுடன் அதிக நேரத்தை செலவிட வேண்டியதன் காரணமாக மஹேல இந்த அழைப்பை நிராகரித்தாரெனக் கூறப்படுகின்றது. (ஐ)

## சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, ஏப். 25

நாடளாவிய ரீதியில் சில பகுதிகளில் உள்ளூர் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை சுமார் 280 ரூபாயாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ஒரு கிலோ உள்ளூர் சம்பா அரிசி 220 ரூபாய்க்கு அரிசி ஆலைகளால் வழங்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

விலை உயர்வால் உள்ளூர் சம்பா அரிசியை வாங்குவதற்கு நுகர்வோர் ஆர்வம் காட்டவில்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# தேசிய இடைக்கால அரசாங்கத்தை 18 மாதங்களே ஸ்தாபிக்க வேண்டும்!

## சட்டத்தரணிகள் சங்கம் ஆலோசனை

கொழும்பு, ஏப். 25

நாட்டில் நிலவும் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு 18 மாதங்களுக்கு இடைக்கால தேசிய ஐக்கிய அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) தெரிவித்துள்ளது.

அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான 13 யோசனைகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் அர்த்தமுள்ள பாராளுமன்ற கண்காணிப்பு இல்லாமை, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமை என்பன தற்போதைய அமைதியின்மைக்கு காரணமாக அமைந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஐக்கிய இடைக்கால அரசாங்கம் 18 மாதங்கள் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஸ்தாபிக்கப்படும் அரசாங்கம் 6 மாதங்களுக்குள் தேர்தலொன்றை நடத்த வேண்டும் எனவும் பொதுத்தேர்தல் நிறைவடைந்த பின்னர் அரசாங்கத்தின் காலம் நிறைவிற்கு வரும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு பேரவையின் அனுமதியின்படி மத்திய வங்கியின் ஆளுநரும் நிதிச்சபையும் நியமிக்கப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் சிபாரிசு செய்துள்ளது. (ஐ)

## இரு வேறிடங்களில் இருவர் படுகொலை!

கொழும்பு, ஏப்ரல் 25

கொழும்பு, அம்பாந் தோட்டையில் இரு நபர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

அம்பாந்தோட்டை பெலிவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாரஜேரிய, திஹிலுவ பிரதேசத்தில் நபரொருவர் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அதே இடத்தை சேர்ந்த 42 வயது நபரே இவ்வாறு படுகொலையானார். படுகொலை செய்யப்பட்டவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபரொருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதேபோன்று, கொழும்பு வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீதொட்டமுல்லை பிரதேசத்தில் வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றிய இளைஞர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கொஸ்லாந்தையை சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார். அவருடன் முன்னர் இணைந்து பணியாற்றிய நபர் ஒருவரே அவரைக் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கே)

### ரம்புக்கனை துப்பாக்கி சூடு:

## முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் அம்பலாங்கொடையில் போராட்டம்!

கொழும்பு, ஏப். 25

தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் அம்பலாங்கொடையில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ரம்புக்கனையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த குடும்பஸ்தருக்கு நீதி கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மஹிந்த தேசப்பிரியவின் சொந்த ஊர் அம்பலாங்கொடை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## ஜனாதிபதி செயலக வீதிகளில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 25

ஜனாதிபதி செயலகத்துக்கு செல்லும் அனைத்து வீதிகளிலும் பொலிஸார் வீதித் தடைகளை பயன்படுத்தி பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

அநதப் பகுதியில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் ஏனைய இடங்களில் பணிபுரிபவர்களின் வாகனங்களை சோதனையிட்ட பின்னரே அவர்கள் அந்த வீதிக்கு அனுமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மியான் நீர்வீழ்ச்சியிலிருந்து தவறிவீழ்ந்து மாணவன் பலி!

மாவனெல்லை, ஏப். 25

மாவனெல்லை மியான் நீர்வீழ்ச்சியை பார்வையிட சென்ற மாணவர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவன் மாவனெல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டநிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கண்டி - குண்டசாலை பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவனாவார். (ஐ)

## மண்மேடு சரிந்து ஒருவர் மரணம்!

கொழும்பு, ஏப்ரல் 25

கண்டி போகம்பரையில் மண்மேடு சரிந்து விழுந்ததில் நபரொருவர் உயிரிழந்தார்.

போகம்பரை - தவுலகலை பிரதேசத்தை சேர்ந்த 36 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

மண்மேடு சரிந்தபோது அதில் சிக்கியவரை மீட்டு உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமானார் என்று கூறப்படுகின்றது.

போகம்பரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (கே)

# ஜனாதிபதிக்கு அதிகாரங்களை வழங்கிவிட்டு பாராளுமன்றிடம் தீர்வை எதிர்பார்க்காதீர்கள்

## லக்ஷ்மன் கிரியெல்ல எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஏப். 25

அதிகாரங்கள் அனைத்தையும் 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியிடம் வழங்கிவிட்டு பாராளுமன்றத்திடம் தீர்வை எதிர்பார்ப்பது பொருத்தமற்றது. பாராளுமன்றத்திடம் தற்போது எந்த அதிகாரங்களும் இல்லை என்பதால் அங்கு வாதப்பிரதிவாதங்களை முன்னெடுப்பதும் பிரயோசன மற்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

நல்லாட்சியில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அதிகாரங்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாராளுமன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆனால், 20ஆவது திருத்தத்தின் ஊடாக பாராளுமன்ற அதிகாரங்கள் மாத்திரமின்றி நீதித்துறை மற்றும் அரச சேவை ஆணைக்குழு உள்ளிட்டவற்றின் அதிகாரங்கள் கூட ஜனாதிபதி வசமாக்கப்பட்டன.

இதனால் தற்போது பாராளுமன்றத்திடம் எந்தவோர் அதிகாரமும் இல்லை. பாராளுமன்றம் பலமற்றதாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதிக்கு வழங்கிவிட்டு, சபாநாயகர் பாராளுமன்றத்திடம் பிரச்னைகளுக்கான தீர்வைக் கோருவது நகைப்பிற்குரியது.

சீனா எமக்கு கடன் உதவிகளை வழங்குகின்ற போதிலும், எமது ஏற்றுமதிகளைப் பெற்றுக் கொள்வதில்லை. ஆனால், இலங்கையின் 70 சதவீதமான ஏற்றுமதிகளை ஐரோப்பிய நாடுகள் பெற்றுக் கொள்கின்றன. எவ்வாறிருப்பினும், அரசாங்கம் இவ்வாறான நாடுகளுடன் தொடர்புகளைப் பேணாது, கடன் வழங்கும் நாடுகளுடன் மாத்திரமே



கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது. இதன் காரணமாகவே சர்வதேசத்தின் உதவிகளும் கிடைக்காமலுள்ளன.

இவ்வாறு நாட்டில் காணப்படும் பிரச்னைகள் குறித்து பாராளுமன்றத்தில் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடுவது பிரயோசனமற்றது. காரணம் பாராளுமன்றத்திடம் எந்த அதிகாரமும் கிடையாது - என்றார். (ஐ)

## துப்பாக்கிகளுடன் இரு நபர்கள் கைது!

கொழும்பு, ஏப்ரல் 25

அம்பாந்தோட்டை, கண்டி மாவட்டங்களில் உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாந்தோட்டை இகினியாகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்ஓயபல்லமை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கண்டியில் மஹயாய பிரதேசத்தை சேர்ந்த நபர ஒருவர் துப்பாக்கி ஒன்றுடன் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் மீதான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பிரதமரின்...

மாணவர்கள் ஒன்றியத்தினர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து பேர ணியை ஆரம்பித்து காலி முகத்திடலை சென்றடைய இருந்தனர்.

இந்நிலையில், போராட்டம் நடைபெறும் காலிமுகத் திடலுக்குள் பேரணியாக செல்ல முடியாதவாறு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டன. இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லம் அமைந்துள்ள விஜயராமை மாவத்தையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுகூடினர்.

இவ்வாறு கூடியவர்கள் பிரதமரின் இல்லத்தை நோக்கிப் பேரணியாக சென்றனர். அங்கு நூற்றுக்கணக்கான பொலிஸாரும் அதிரடிப் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுட்டிருந்தனர். இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு நின்று ஜனாதிபதிக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர். அவர்களை வீட்டுக்கு போக வேண்டும் என்று வலியுறுத்தினர். இதனிடையே, ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் இல்லத்துக்குள்ளும் நுழைய அவர்கள் முயன்றனர். அவர்களை பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் தடுத்து நிறுத்தினர். இதனால், அந்தப் பகுதியில் பெரும் பதற்றநிலை உருவானது.

இதேபோன்று, அரசாங்கத்துக்கு எதிராக அரசாங்கத்துக்கு எதிராகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி கோரியும் மினுவாங்கொடை - உடுகம்பொலை புனித பிரான்சிஸ் தேவாலயத்திலிருந்து நேற்று ஊர்லம் ஒன்று ஆரம்பமானது.

இந்த ஆர்ப்பாட்டம் மினுவாங்கொடையை வந்ததையடுத்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டுக்கு முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அந்தப் பகுதியிலும் பதற்ற நிலை ஏற்பட்டது. (ஐ)

## மேலும் 50 கோடி...

உடனடியாக 400 கோடி டொலர் தேவைப்படுகிறது என்று கூறப்படுகின்றது. இதைப் பெறுவதற்காக பல்வேறு தரப்புகளுடனும் பேச்சு இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையிலேயே இந்தியா மேலும், 50 கோடி டொலர்களை அளிக்க முன்வந்துள்ளது. ஏற்கனவே இந்திய அரசு 190 கோடி டொலர் கடன்களை வழங்கியுள்ளது. அத்துடன், 40 ஆயிரம் தொன் அரிசியையும் அனுப்பி வைத்துள்ளது.

இந்நிலையிலேயே, எரிபொருள் இறக்குமதி செய்வதற்காக மேலும் 50 கோடி டொலர் கடன் வழங்க இந்தியா சம்மதித்துள்ளது. இந்நிலையில், மேலும் 100 கோடி டொலர்களை கோரியுள்ளோம். அதையும் இந்தியா சாதகமாகப் பரிசீலிக்கும் என்று நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ஐ)

## அதிபர்கள்,...

நிலவும் சூழலில் கடமைகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளன. வரிசையில் நின்றே நாட்டு மக்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

கஷ்ட - அதிகஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் - எரிபொருள் தட்டுப்பாடான இன்றைய சூழலிலும் - விரல் அடையாள இயந்திர நடைமுறைகளால் தொழில் ரீதியாகவும் - உளவியல் ரீதியாகவும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே, இவற்றுக்கு உடனடித் தீர்வை அரசாங்கம் வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை (இன்று) நடைபெறும் சுகயீன லீவு போராட்டத்தில் அனைத்து அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபடுவர். எனவே, மாணவர்களின் பெற்றோர்கள் வீணான சிரமங்களை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் கேட்டுள்ளார். (ஐ)

## உறுதியான...

நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பு தொடர்பில், ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

உறுதியான அரசியல் தலைமைத்துவம் ஒன்று ஏற்படும் வரையில் அனைவரும் விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என். சிறீகாந்தா தெரிவித்தார். (ஐ)

## மஹிந்த...

னர்கள் சிலர் சந்திப்பதற்கு முயன்றிருந்தனர். இந்நிலையில், அவர் கொழும்பை விட்டு விலகி தங்காலைக்கு சென்றுவிட்டார்.

இதனால், இன்று திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்திலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பாரா என்றும் சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, புதிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் தன்னிச்சையாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் 113 பேரின் கையொப்பங்கள் அடங்கிய ஆவணத்தை ஜனாதிபதியிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், இரு நாட்களுக்குள் நாட்டில் பெரும் அரசியல் திருப்பம் ஒன்று ஏற்படும் என்று தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் அதிகம் பேசப்படுகின்றது. (ஐ)

## அரசியலில்...

உறுப்பினர்களை தம்பக்கம் இழுக்கும் அரசாங்கத்தின் முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இந்நிலையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகும் முடிவை அறிவிக்கக்கூடும். அவ்வாறு இல்லாவிட்டால் மேலும் சிலர் அரசியிலிருந்து வெளியேறக்கூடும் என்று கூறப்படுகின்றன. இந்நிலையிலேயே இரு நாட்களில் பெரும் திருப்பம் ஏற்படலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## 21ஆவது திருத்த...

அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தின்போது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்ப்பில் பங்கேற்றிருந்த எம். ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நான் சந்தித்தபோது, 19ஆவது திருத்தச்சட்டத்தினை மீண்டும் அமுல்படுத்தும்முகமாக 21ஆவது திருத்தச் சட்டத்துக்கான யோசனையை திங்கட்கிழமையன்று அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

குறுகிய காலத்தில் இந்தவிடயத்தை முன்நகர்த்துவதாக இருந்தால் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான தன்னிச்சையாக இயங்கும் அணியினர் சமர்ப்பித்துள்ள யோசனையை பின்பற்ற முடியும் என்று சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஆளும் தரப்பினர், தற்போது வரையில் அது தமது கைகளுக்கு கிடைக்கவில்லை. அதுகிடைத்த பின்னரே தீர்மானத்தைக் கூற முடியும் என்று கூறியுள்ளனர்.

இதேநேரம், வாஷிங்டனில் இருந்து நிதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நாடு திருப்பியதும் குறித்த 21ஆவது திருத்த முன்மொழிவு தொடர்பில் தீர்மானங்களை எடுக்க முடியும் என்று தீர்மானிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

# பாதிக்கப்பட்டவர்களுக்காக பாப்பரசர் விசேட ஆராதனை



வத்திக்கான், ஏப். 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பலியானோர் மற்றும் காயமடைந்தவர்களுக்காக இன்று திங்கட்கிழமை சிறப்பு பிரார்த்தனை ஆராதனையை பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் நடத்துவார். இதில் பேராயர் தலைமையில் சென்றுள்ள தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களும் பங்கேற்பார்கள் என்று வத்திகானிலுள்ள பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

தற்போது வத்திக்கானில் இருக்கும் பேராயர் தலைமையிலான குழுவினர் இந்த ஆராதனையின் பின்னர் பரிசுத்த பாப்பரசரை சந்தித்துப் பேசுவர் என்றும் அவர் கூறினார்.

“இது ஓர் அரசியல் நிகழ்வாக இருக்காது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நடத்தப்படும் ஒரு சேவை மட்டுமே. அவர்களின் நிலையை உலகுக்கு காட்ட மட்டுமே நாம் விரும்புகிறோம்”, என்று முகநூல் மூலம் உரையாடிய கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

“தாக்குதல்களின் பின்னணியிலுள் உண்மையைக் கண்டறிய சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற நாங்கள் தள்ளப்பட்டோம். ஏனெனில் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன”, என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# மூதூரில் சைவ மக்களை அச்சுறுத்தினார் பிக்கு!

## புலனாய்வாளர்களும் படம் பிடித்து மிரட்டல்

திருகோணமலை, ஏப். 25

மூதூரில் உள்ள தமிழர்களின் பழமையான ராஜவந்தான் மலை ஆலயப் பகுதிக்கு நேற்று முன்தினம் சைவ மதகுருக்களையும், மக்களையும் பிக்குகளும் பொலிஸாரும் இணைந்து அச்சுறுத்தினர் என்று கூறப்பட்டது.

ராஜவந்தான் மலை ஆலயம், அதன் அடிவாரத்திலுள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் என்பன வரலாற்று ரீதியாக சைவத் தமிழ் வழிபாட்டாளர்களின் புனிதத் தலங்களாக உள்ளன. 3 ஆண்டுகளுக்கு முன்பு ராஜ வந்தான் மலை சைவ தலம் அழிக்கப்பட்டு, அந்த இடத்தில் பௌத்த சின்னங்கள் வைக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

“எமது பழமை வாய்ந்த வரலாற்று சான்று உள்ள இந்த ராஜவந்தான் மலையை மேலே சென்று பார்ப்பதற்கு பிள்ளைகள், பெற்றாரை அங்கு அழைத்து சென்றோம். அமைதியாக சென்று கொண்டிருந்தவேளை அங்கிருக்கும் பௌத்த மதகுருக்கள் வீதிக்கு முன்வந்து மேலே செல்ல விடமாட்டோம்”, என்று கூறி எங்களை மறித்தனர் என வழிபடச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

மக்களையும் சைவ மத குருமார்களையும் தள்ளி கைபேசியை பறித்து வீசியும் அநாகரிகமான முறையில் பிக்குகள் நடந்து கொண்டதுடன், இன ரீதியான வன்ம வார்த்தைகள் பேசி எங்களை அச்சுறுத்தினார். எமது மக்கள் அவரின் தடையை பொருட்படுத்தாது மேலே சென்று பார் வையிட்டு இயற்கையான இறைவனை வழி பட்டு மீண்டும் அமைதியாக மாணிக்க விநாயகர் ஆலயத்துக்கு வந்து சேர்ந்தோம். இத்தனைக்கும் பொலிஸாரும் புலனாய்வு பிரிவினரும் அவ்விடத்தில் நின்று பார்வையிட்டு படங்களை எடுத்த வண்ணம் நின்ற னர் எனவும் அங்கு சென்ற தமிழ் மக்கள் கூறினர்.

தமிழர் வரலாற்றுச் சான்றுகள் நிறைந்த பூர்வீக மண்ணில் எமது மத உரிமை, கௌரவம் மீறப்படுவது தொடர்கதையாக உள்ளது. ஏனைய மதகுருவை மதிக்கத் தெரியாத மதகுருமார் எப்படி மக்களை மதிப்பார்? இந்த நாட்டில் எப்போது இன, மதவாதம் இல்லாமல் போகும்? எனவும் அங்கு சென்ற மக்கள் கேள்வி எழுப்பினர். (ஐ)

## வடக்கின்...

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கோரி நடக்கும் போராட்டங்களுக்கு ஆதரவாக இன்று திங்கட்கிழமை அதிபர்கள், ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தை நடத்துகின்றனர்.

இந்நிலையில், வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் 2021ஆம் ஆண்டு தரம் 6,7 மற்றும் 8 ஆகிய மாணவர்களுக்கான மூன்றாம் தவணை பரீட்சை நடத்துகின்றது. இதனால், இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகள் அனைத்தும் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 20ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைகள் முன்னரே அறிவிக்கப்பட்டபடி நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## காலிமுகத்திடலில்...

முழுவதும் தகவல்களை வழங்கும் பொருட்டு பல்வேறு நாடுகளின் செய்தியாளர்கள் இலங்கை வந்துள்ளனர். சுமார் நூறுக்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் காலிமுகத்திடலுக்கு சென்றுள்ளனர். இதனால், சர்வதேச ஊடகங்களின் கவனத்தை எதிர்வரும் நாட்களில் இளைஞர்களின் போராட்டம் முக்கிய செய்திகளாக இடம் பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## யாழ். வந்த...

உரையாடினார்.

பின்னர், யாழ்ப்பாணத்தின் சிவில் சமூகத் தலைவர்கள் சிலரையும் அவர் சந்தித்துப் பேசினார். இது குறித்து அவர் தனது ருவிட்டர் பதிவில், “எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் உரிமைகளுக்காக வாதிடுவதில் சிவில் சமூகம் முக்கிய பங்கு வகிக்கிறது. இன்றைய அரசியல், பொருளாதார சவால்கள் குறித்து விவாதிப்பதற்கும் ஜனநாயக இலங்கைக்கான எமது ஆதரவை மீண்டும் வலியுறுத்துவதற்கும் நான் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகத் தலைவர்களை சந்தித்தேன்”, என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய தினமும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர் தமிழ் அரசியல் கட்சி பிரமுகர்களை சந்தித்துப் பேசுவார் என்று அறிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அரசாங்கம் வீதித் தடைகளை உடனடியாக அகற்ற வேண்டும்!

## எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 25

மக்களின் வாழ்க்கையை சீர்குலைக்கும் வீதித் தடைகளை அரசாங்கம் உடனடியாக அகற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மக்கள் அதிகாரம் என்ற சுனாமி பேரலையினால் அழிந்துள்ள அரசாங்கம், தனது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக மக்கள் மீதான அடக்குமுறைகளையும் அச்சுறுத்தலையும் மேற்கொண்டு வருகின்றது.

இவற்றில் அண்மைச் சம்பவமாக, கொழும்பு கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள வீதிகளை மறிக்கும் வகையில் நிரந்தர வீதித் தடைகளை அமைத்துள்ளது.

லோட்டஸ் வீதி முற்றாக மூடப்பட்டுள்ளமையால் வாகனங்கள் கொழும்புக்குள் பிரவேசிப்பதற்கு வேறு பாதைகளை பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் மக்கள் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியை கண்டு இந்த அரசாங்கம் அச்சத்தில் இருக்கின்றது. கேலிக்கூத்தான வீதி தடைகள் மூலம் மக்களின் போராட்டங்களை தடுக்க முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்.

இரண்டு வருடங்களாக இந்நாட்டில் பல்கலைக்கழக பிரிவுகள் மூடப்பட்டுள்ளதால், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் தற்போதுவரை முடங்கி போயுள்ளன.

நாட்டின் பிரஜைகளின் அங்கத்தவர்களாகவுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டம் நடத்துவதற்கு இருக்கும் உரிமையை அரசாங்கமோ அல்லது வேறு எந்த சக்தியினாலும் மீற முடியாது.

சுமார், இரு வாரங்களுக்கு மேலாக ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைப்பதற்கு மக்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அரசாங்கம் தற்போது, பயங்கரவாத பாணியை பயன்படுத்தி நிரந்தர வீதி தடைகளை உருவாக்கி, தாங்கள் அடைக்கப்பட்டிருக்கும் வரையறையை சற்று விரிவாக்குவதற்கே தயாராகி வருகின்றன.

அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் எதிர்ப்புகள் வெடித்துள்ள இவ்வேளையில், அந்த மக்களின் எதிர்ப்பை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் எந்தவொரு துருப்புச் சீட்டும் இல்லை.

மக்களின் உரிமைகளுக்கு எதிரான அரசாங்கம் முன்னெடுக்கும் எந்தவொரு அடக்குமுறைக்கும் எதிராக தயக்கமின்றி முன்நிற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி இருமுறை சிந்திக்காது என்பதையும் வலியுறுத்துகிறோம்.

எனவே, மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகள் மற்றும் உரிமைகளுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் இந்த தன்னிச்சையான நடவடிக்கைகளை திரும்பப் பெற வேண்டும் என்பதுடன், அரசாங்கத்தின் தலைவிதி கடைசி விளிம்பில் இருக்கும் போது அல்லது இந்த முட்டாள்தனமான முடிவுகளின் மூலம் மக்கள் மீதான அழுத்தத்தை தீவிரப்படுத்த வேண்டாம் எனவும் நாங்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம் - என்று குறிப்பிட்டுள்ளார்.

# பதவி விலகுவதைத் தவிர பிரதமருக்கு வேறுவழியில்லை!

## முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும



கொழும்பு, ஏப். 25

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதைத் தவிர அவருக்கு வேறு வழி யில்லை." - இவ்வாறு முன்னாள் அமைச் சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பிரதமர் பதவியில் தான் தொடர்ந்து நீடிப்பார் என்றும், இடைக்கால அரசு அமைந்தால்கூட அதுவும் தனது தலை மையிலேயே மலரும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரதமரின் இந்தக் கருத்து தொடர்பில் முன்னாள் அமைச் சர் டலஸ் அழகப்பெரும கருத்துத் தெரி விக்கும்போது,

"பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகளால் நாடு பேரவலத்தைச் சந்தித்துள்ளது. எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அமைச்சரவையும் உடனடியாகப் பதவி விலகி அனைத்துக் கட்சிகளின் பங் களிப்புடன் இடைக்கால அரசு அமைய வழிவிட வேண்டும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகு வதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. எனவே, பழுத்த அரசியல் வாதியான அவர் எமது கோரிக்கையை ஏற்பார் என்று இன்ன மும் நம்புகின்றோம்" - என்றார். (ஐ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | உதிர்வு |
|---|---|---|
| 09 - 01 - 1934 |  | 24 - 04 - 2022 |

## திருமதி வேலாயுதம் சிவபாக்கியம்

வேலாயுதம் சிவபாக்கியம் அவர்கள் 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் (சின்னத்துரை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா பொன்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னம்மாவின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளை (சின்னமுத்து) அவர்களின் அன்புச் சகோதரியும், தயாநிதி (தயாமாஸ்ரர்), சியாமளாதேவி, மஞ்சுளாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி (அதிபர் யா/புலோலிமெ.மி.த.க.பாடசாலை),பார்த்தீபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மொறிஸ் (ஜேர்மனி), ராதை (ஜேர்மனி), ஆதித்யா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைமாணவி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 25.04.2022 திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மட இந்துமயானத்தில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0753132854

தகவல்: தயா மாஸ்ரர் (தயாநிதி -மகன்)

Dan Tv

# பால்மாவின் விலை வார இறுதியில் ஏறும்!

கொழும்பு, ஏப். 25

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை இந்த வார இறுதியில் மேலும் அதிகரிக்கும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

பால்மாவுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளதால் விரும்பியவாறு அதன் விலையை பால்மா நிறுவனங்கள் அதிகரித்து வருகின்றன. எவ்வளவு விலை அதிகரிக்கும் என்று கூறமுடியாது என்று அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒரு கிலோ பால்மாவின் விலை 800 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரையில் அதிகரிக்கலாமெனக் கூறப்படுகின்றது. (ஐ)




# பொருட்களின் விலை உயர்வு வவுனியாவில் போராட்டம்!

வவுனியா, ஏப். 25

நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு கண்டனம் தெரிவித்து வவுனியா ஈஸ்வரிபுரம் பகுதியில் ஆர்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஈஸ்வரிபுரம் மாதர் சங்கத்தின் ஏற்ப்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள் அயல் கிராமத்தவர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கட்டுப்பாட்டு விலையை கொண்டுவா, கோட்டா, மஹிந்த அரசே ஆட்சியை விட்டு வெளியேறு, போராடும் மக்களை சுட்டுக்கொல்லாதே, போன்ற வாசகங்கள் தாங்கிய பாதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். (ஐ)

# வீதித் தடைகளில் ஆணிகள் மக்கள் காயமடையும் ஆபத்து!

## எச்சரிக்கிறது சட்டத்தரணிகள் சங்கம்



கொழும்பு, ஏப். 25

கொழும்பை அண்மித்துள்ள ஒரு சில வீதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித் தடைகளில் கூரிய ஆணி போன்ற கம்பிகளை பொருத்தி கறுப்பு நிற பொலித் தீனால் மறைத்து வைக்கப்பட்டுள்ள தாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

மக்களுக்கு பெரும் காயங்கள் ஏற்படுவதற்கான அபாயம் நிலவுகின்றமை தொடர்பில் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக் கையில் சுட்டிக்காடடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர், பொலிஸார் மற்றும் படையினர் எந்தவொரு நிலைமையின் கீழும் எதிர்ப்பில் ஈடு படுபவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் சுதந்திரமாக நடமாடுவதற்கும் உள்ள மக்களின் உரிமையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏதேனும் வன்முறை சூழல் ஏற்பட் டால் அது நாட்டிற்கு பாரிய எதிர்விளைவுகளை ஏற் படுத்தக்கூடும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.